521

Registered No.—M. 2492.

உ
சிவமயம்.
தேவி துணை.

21 JAN 1930

# KALANIDHI.



A high class Tamil Monthly Journal.

# கலாநிதி.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.


| தாய் | சுக்கில-ஞு ஆவணி-மீ | சேய் |
| --- | --- | --- |
| 1 | 1929-ஞு ஆகஸ்டு-மீ | 5 |


உள்ளடக்கம். பக்கம்.


1. துதி .... .... .... 1
2. தனிப்பாடல் .... .... .... 3
3. கக்ஷிவேண்டாம் .... .... .... 4
4. தமிழ் .... .... .... 6
5. வேளாண்மை .... .... .... 9
6. தீபாவளிப்பண்டிகைக் கொண்டாட்டம் .... 15
7. பலசரக்கு .... .... .... 21
8. கலாநிதிச் சேவகன் .... .... 23
9. மதிப்புரை .... .... .... 24
10. பணி .... .... .... 26
11. கலாநிதிக்குச் சாஸ்வத சந்தாதாரர்கள் .... 28
12. மதனுபிஷேகம் (நாவல்) .... .... 29
13. ...வதம் .... .... 31


JL
ஔ2ll,৭29.
N29.1.5
223630

...ர்:—
...த்தியநாத சர்மா,
...த்தாகுடி வடக்குச்சேத்தி P. O.,
Via வேதாரணியம்.
20...

Edward Press—Tiruvarur.

உ

சிவமயம்.

தேவி துணை.

OFFICE OF THE ... 21 JAN 1930 ... MADRAS

# கலாநிதி.


## மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராசிரியர் :—இராம. வயித்தியநாத சர்மா.

| | | |
|---|---|---|
| தாய் 1 | சுக்கில-௵ ஆவணி-௴<br>1929-௵ ஆகஸ்டு-௴ | சேய் 5 |


### விநாயகர் துதி.

கலாநிதியாம் பத்திரிகை காசினியிற் காண்போர்
கலாநிதியாய் நாளுங் களிக்கக்—கலாநிதியாஞ்
சத்தியருள் பெற்றமதத் தந்திமுகத் தேங்கைப்பதம்
பத்திசெயச் சித்திமிகும் பார்.

---

### முருகன் துதி.

---

விருத்தம்.

சீருற்ற தங்கமயி லேலுற்றி லங்கு புகழ்
    மேசாத் திகழ்ந்த முருகா
தெய்வானை வள்ளியிரு மெய்பாக முள்ளியுஞ்
    செய்கையது கொண்ட முருகா
சூருற்ற திறன்முழுதும் வேரற்றி டச்செய்து
    சுரர்குலங் காத்த முருகா
துன்றுபடை வீடெனுங் குன்றுதொறு மாடலைத்
    தோன்றவே செய்த முருகா
பேருற்ற பிரணெற்றி நேருற்ற விழி வழி
    பிறந்துவாழ் வுற்ற முருகா
பெரியதமி ழருமையின் துரிமையென வுலகுபுகழ்
    பெறுமுயர்வு பெற்ற முருகா
தேருற்ற புலவர்கவி யேருற்ற சந்தமொடு
    செப்பத் தகுந்த முருகா
தெங்காரு வனமேவு வங்காள நகரோறு
    சிங்கார முருகேசனே. (1)

## தேவிதுதி.

### விருத்தம்.

அமரியங் தரியாளி வூர்தியெண் டோளிகலை
யானத்தி யம்ப ணத்தி
அரியேறி பாலைக்கி ழத்திபக வதியையை
யரவணைச் செல்வ னிளையாள்
குமரிகலை யூர்திநா ரணிகன்னி கார்த்திகை
கொற்றவை கரத்தில் வாளைக்
கொண்டவீ ரச்செல்வி காத்தியா யனிகௌரி
கொற்றிமகி டற்செற்ற வள்
சமரிசுந் தரிசூலி விசையைநா ராயணி
சக்ராயு தத்தி வீரி
சண்டிகைக ராசிரமி தித்தசக் கரபாணி
சயமகள் விந்தை நீலி
விமலிசன மாகவுரு மேவிபுவி மீதிலுறை
விமலையெற் கருள் செய்குவாய்
வேதவன நாதனுறை சூதவன மீதிலுள
வேதவன துர்க்கை யுமையே. (2)

---

(திருப்புகழ் மெட்டு.)

கோல விழியுமுஞ் சேலையழகுமங்
கோடியர் முலையுங்—கனிவாயுங்
கோண லதுறுசங் கோடு வளையலுங்
கூறுமய லுறுங் —குணமேவு
பால விழியர்கண் பார்வை யது கரும்
பாக மனமுவங்—துறவாடி
யாக மருவுசம் போகமதி லெனன்
பார வனுதினஞ் —சுழல்வேனை
பால விழியர்தம் பால வெனகமுன்
பால மரவிதம்—பெறவே யென்
பாவமிரியவும் பேத மறவு முன்
பாத மவை பணிந் —துயவே யான்
கால னணுகிடும் போதெ னதிருகண்
காண வருகுவங்—தருள்வாயே
காத லதுறவங் காள மருவுசிங்
கார முருக வெம் —பெருமாளே.

# தனிப்பாடல்.

(R. V. சர்மா அவர்கள் இயற்றியது).

4-10-22ல் தேவகோட்டை தெற்கு வீடு அ. ரு. லெ. வே. நடராசன் செட்டியார் அவர்கட்கு ஓர் தீபாவளியின்போது எழுதிய நிருபம்.

கல்விச் சமுத்திரஞ் சொல்வைத்த சத்திரங்
கவிமாரி பொழியு மேகம்
கடன்மடை திறந்தபோ லடலுறுந் தமிழ்ப்ரவா
கம்புகழ் சிந்து வண்ணக்
களஞ்சியம் புவியோர்க ளஞ்சும்ப்ர சங்கங்
கவிக்குளுயர் வாகு சிம்மம்
கருதுவைத் திய நாத சருமா வெனச் சொலுங்
கவிராச னெழுது மோலை
செல்வக்கு பேரன்ப்ர பல்யக்கு மாரன்
திருத்தேவை நகர் வாழ்பவன்
செந்தமிழ்க் குபகாரி சிந்தைகொ ளுதாரிநற்
சீமான் சிறந்த வள்ளல்
சிபதி தயாபதித ராபதிக்கு பாபதியோர்
திகழ்வணிக குலவதி பதி
திடமார் சிரஞ்சீவி நடராச வள்ளற்
சிகாமணி மகிழ்ந்து காண்க
பல்வித்தை கற்றவென் சொல்வித்தை யுறவுமிப்
பாவாற் றருஞ்செய்தி யும்
பகர்வதென் னெனிலுலகு மகிழ்வுற வெனுளுநீ
பார்சகல சம்பத்துமே
பரிவுறப் பெற்றுநல் விரிவுறவு முன்குலம்
பரம சிவ னருளி னாலே
பலமுறக் குழவியையு நலமுறப் பெற்றுமிப்
பாரின்மிக வாழ்க வென்றே.

சொல்வித்த கவியிதென் கல்விக்கு மாரியுஞ்
சுகமேற வுன்ற னுக்கு
சொன்னபடி யோராண்டு தன்னிலொரு மகவையுஞ்
சுந்தரமுறத் தருகுவாள்
சுகமேவு நடராச மக ராச வள்ளலே
தோன்றிடுந் தீபாவளி
தொந்திர வெனைச்செயா துன்றுறச் செய்துபுவி
சுகமாக வாழ்க மாதோ.

## கக்ஷி வேண்டாம்.

நான் இப்பத்திரிகையை நடாத்த ஆரம்பித்ததுமுதல், என்னைக் கண்ணுற்ற அன்பர்களில் பெரும்பாலோர்கள், தாங்கள் சேர்ந்து உழைப்பது சுயராஜ்ஜியக் கக்ஷியா? அன்னிய ராஜ்ஜியக் கக்ஷியா? சுயமரியாதைக் கக்ஷியா? அன்னிய மரியாதைக் கக்ஷியா? மிதவாதக் கக்ஷியா? அமிதவாதக் கக்ஷியா? பிராமணக் கக்ஷியா? பிராமணரல்லாதார் கக்ஷியா? ஒற்றுமைக்குங் கக்ஷியா? ஒற்றுமையாமைக் கக்ஷியா? என்று எண்ணிறந்த கக்ஷிகளின் பெயர்களை யுரைத்து வினவுகின்றனர். இன்னோர்களுக்கு பதிலியம்புவதென்றால் அசாத்தியமாகின்றது. அனைவருக்கும் ஒரு விடையாக இதன்மூல மறிவித்துக்கொள்ளுகிறேன்.

கக்ஷியென்பது வேறுபடல், பேதப்படல், ஒற்றுமையின்மை, கலகம், முதலான மாறுபட்ட பொருள்களைப் பெற்றிலங்குகின்றது. ஒரு கூட்டத்தார் அல்லது ஒரு தேசத்தார் தங்களுக்குள் மாறுபட்டு மனக்குரோதத்துடன் பிரிந்து கலகம் விளைத்தலுக்குக் கக்ஷியெனப் பெயரிட நேர்கின்றது. கக்ஷியெனும் பெயரைச் சூட்டிக்கொண்டதும் பிறருக்கிடந்தந்து, மூட்டைப்பூச்சிக் கிடங்கொடுத்த சீலைப்பேனை நிகர ஆய்விடுகின்றனர். இறுதியிற் கக்ஷியாற் பெறும்பேறு தந்நலமிழத்தலே.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே நமது பெரியோர்கள், அன்னவர்களின் பிற்கால நிகழ்ச்சியாகிய நமது தற்கால நிகழ்ச்சி எவ்வித விடையூறு மின்றி, செவ்வனே மனமங்களமாக நடைபெறல்வேண்டுமெனக் கருதி, அநேக சட்ட திட்டங்களை எளிதிற் புரியத்தக்கனவாய் இயற்றி யேகினர். அவைகள், ஒவ்வொன்றும் பொன்னேபோற் போற்றத்தக்கனவே யொழிய புறக்கணிக்கத்தக்கன எது மின்று. அன்னோர்களின் குற்ற மற்ற கட்டளைகளை மறந்து, மனம்போனவாறு எதையுமியற்றப் புகுவதாற்றான் பலான இடுக்கண்கள் மலிகின்றன. நாம் கல்வியாலும், செல்வத்தாலும், கைத்தொழிலாலும் எல்லா நாட்டினும் முன்னேறி நிலவ, ஓர் கட்டளையா லறிவித்திருக்கின்றார்கள். அதுதான் "எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" என்ற வினுவும்விடையும். அருமருந்தொப்பும் இவ்வமுதமொழியின் அவசியத்தைக் கருதாமலும், கவனிக்காமலும் மறந்தும் அசட்டைசெய்துமேதான், பலான கக்ஷிகளைப் பயிராக்குகின்றனர். அக்கக்ஷிப் பயிர்கள் ஆணிவேருடன் பலத்து மரமாகி விடுகிறதால் நமது தேசத்திற்கு இல்லாமையும், கல்லாமையும், பொல்லாமையும் புகுந்து குடிகொள்ளுகின்றன.

என்று, கக்ஷி மரம் வெட்டப்படுகின்றதோ, என்று, கக்ஷிப் பயிரிடல் நிறுத்தப்படுகின்றதோ, என்று, கக்ஷி யெனும் பதம் நம் தேசத்தார்களால் விலக்கப்படுகின்றதோ, என்று, நம்மவர் மனத்துள் 'ஒத்தால் வாழலாம்' என்ற சட்டம் குடிபுகுமோ, அன்றே நமது நாடு, நமது கல்வி, நமது செல்வம் மேலோங்கி வளர ஆரம்பிக்கும்.

அன்றே நாம் முன்னேறினோம். அன்றே இணையற்று விளங்கினோம. அன்றே நமது தாயும் மகிழுறுநாள்.

ஆகையால் கக்ஷியெனும் பதத்தை நம்மவர்கள் மறந்து, ஒற்றுமைக்கு மகிழ்ந்து, புராதனச் சட்டத்தை நினைந்து, நமது செல்வம்பெற உவந்து, முன்னேற முயலுவோம். நம்மவர்களைக் கெடுத்து அழித்துவரும் கலக விதையாகிய கக்ஷி வேண்டாம்.

பத்திராசிரியர்.

# தமிழ்.

தேத்தாகுடி S. கந்தசாமி அய்யர் எழுதியது.

(முன்தொடர்ச்சி.)

இசீருஞ் சிறப்பு மிகுந்த நந் தமிழ் அரசர்களில் ஒருவர் பரம்பரையேனு நீடித்து இதுகாறு நிலவுறின், நமது தமிழ், இவ்வண்ணம் இயற்கை குன்றாது. தமிழ் அரசர்கள் தமிழ் நாட்டிலேயே பிறந்து, தமிழையே மிகுதியாய்க் கற்று, அதன் அருமை பெருமைகளை நன்குணர்ந்ததினால், கலைவல்லோர் ஆக்கிய கவிதைகளைக் காது களிக்கக் கேட்டு, அவ்வப் பாக்களின் அமைப்பு முதலியவைகளுக்குப் பேரானந்தமெய்தி, பாடினோர்களைக் கண்ணுற்று, அருமைப்புலவர்களே! வேண்டியது கொண்மின், விரும்பியது கேண்மின், என் னரசுரிமையை நீவிரே பெறுமின், என் புதல்வனை நுங்கவிக்குப் பரிசாக வாங்குமின், என்நாட்டிற் பாதியை ஆளுமின், யாவற்றையும் நீவிரேயாளுமின் என்று வேண்டி வேண்டி யளித்தனர். அக்காலம் நமது செல்வத்தமிழ் தாண்டித் தாண்டிக் குதித்தது. தமிழை மிகக் கற்றோரெல்லாம் அரசபோகத்தை அனுபவித்தனர். அரசனாதியாய் தோட்டியீறாகத் தமிழையே பேசிவந்தார்கள். நாடுந் தமிழ் நாடு, அரசனுந் தமிழ் அரசன், மொழியுந் தமிழ்மொழி, செல்வமுந் தமிழ்ச் செல்வமாகவிருந்ததால், அன்னிய மொழிக்கு இந் நாட்டில் மதிப்பற்று, தாய்மொழி மிக மிகப் பெருமையுடன் விளங்கியது. தற்காலம் நாடு தமிழ் நாடாயும், அரசன் ஆங்கில அரசனாயு மிருப்பதால், தாய்மொழி தத்தளிக்க நேர்ந்தது. அரசர்கள் அவ்வவரின் தாய்மொழியை விருத்திசெய்யக் கருதுவார்களே யொழிய, வேற்றுமொழி விருத்திக்குப் பாடுபடக் காரணமில்லை.

ஆகையால் தற்காலமாளும் ஆங்கிலேய வரசர் நந் தாய்மொழி விருத்திக்குப் பாடுபடவில்லையென்று வீணே குறை

கூற வேண்டிய தில்லை. நமது நாட்டில் வளமிஞ்சிய சிற்றரசர்கள் இருந்தாலும் அன்னவர்மீதாயினுங் குறை கூறலாம். அதற்கு மிடனில்லை. ஆனதால், தமிழ் நாட்டை அயல்பாஷையினர் ஆளுவதாலும், தக்க சிற்றரசர்கள் இல்லாமையாலும், தமிழ் நாட்டாரே தமிழை ஆதரிக்கவேண்டும். ஒருவன் இடையிலுள்ள உடையை இளகாவண்ணம் மற்றொருவன் அடிக்கடி கவனித்துக் கட்டிவிடுவதென்றால் ஆகாததுபோல், அவ்வவர் தாய் மொழியையும் அவ்வவரேதான் ஆதரித்தல்வேண்டும். நமது உடை அவிழும்போதெல்லாம் அன்னியர் கவனித்துக் கட்டுவாரென்று எதிர்பார்ப்பதும் இறுதியில் நிர்வாணமாய் நிற்கவே நேரும்.

ஆகையால், நமது தாய்மொழியை யாமே காப்பாற்ற வேண்டுமே யொழிய, அன்னியர் காப்பாற்றவேண்டுமெனக் கூறத்துணிவது நிதானிக்காத அவசரப்பேச்சேயாகும். அவ்வவர் மொழியைக் கற்கவேண்டாமென ஆங்கிலேய அரசர் ஆணையிடவில்லை. நம் பசிக்கு நாமுண்பது போன்று, நமது மொழியை நாம்தான் காப்பாற்றல்வேண்டும். நம்முடலிலுண்டாய தினவுக்கு ஏற்றவாறு நாமே சொறிந்துகொள்ளுகிறோமன்றோ? அன்னியருக்கு நமது தினவு தெரியுமோ? நமது மொழி நமக்குத்தெரியவில்லையென்றால், நம்மவர்க்குத்தானே அவமானம். தமிழருக்குத் தமிழ் தெரியவில்லை யென்பதால் ஆங்கிலேயருக்கு அவமானமாமோ. நமதுகுளிருக்கேற்ப நாம் தானே போர்த்துக் கொள்ளுகிறோம். நம துடலின் சீதளம் பிறரறிவரோ? அது போன்று, நமது மொழியைக் காப்பாற்றல் நம்மவர்க்குத்தான் முழுப்பொறுப்பென்று, நமது நாட்டார் கருதியதாய்க் கழற விடமுண்டோ? "தன்னைப்பெற்ற தாய் கிண்ணிப்பிச்சையெடுக்க தம்பி கும்பகோணத்தில் அன்னதானஞ் செய்கிறான்" என்ப போன்றுதானே நம்மவர் ஆங்கில வாழியில் ஆழ்ந்ததும், "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" என்ற தமிழ் வாக்கியம் நம்மவர் அறிந்திருப்பின் தமிழ்த்தாயை மறப்பார்களோ. தன் தாய் மலைபோலிருக்க அன்னியத்தாய்ப்பாலுக்காசைவைப்பரோ.

தாய்ப்பாலுக் காசையுற்றுத் தமிழைப் படித்தால் ஏளனஞ் செய்யவுந் தலைப்பட்டார்கள். தமிழிலுள்ள பாரத இராமாயணங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் படிக்கவாசையுற்றனர். அது ஏனெனில், தமிழில் படித்தால் அண்டர்ஸ்டாண்டு ஆகவில்லை என விடை விளம்புகின்றனர் இவ்விடை எவ்வளவு வெட்கத்தை யளிக்கின்றதென உணரவியலாமல் நவீன நாகரீகம் மறைத்துவிட்டது. தாய்ப்பாஷை தனக்குத் தெரியவில்லையென்று சொல்லும் தமிழனை அன்னிய நாட்டார் என்னென்றுன்னுவர்? இவ்வண்ணம், தமிழ் நாட்டாராகிய நாம் நமது தாய் மொழியை மறந்து ஏமாந்திருந்தால் அரசியலார் யாது செய்வார்?

நமது தமிழரசர்கள் பெருமிதமாக வாழ்ந்த காலத்தில், நமது தமிழ்மொழியை பரதகண்டம் முழுவதும் பரவச்செய்த தன்னியில் ஐரோப்பா முதலிய மேல் நாடுகளிலும் பரவச் செய்தார்கள். ரோமாபுரியென்ற பெரிய பட்டணமாகிய ரோமேனியாவில் தமிழ் அரசர்களை ஏற்படுத்தி, அந்நகரில் அநேகந் தமிழ்ப் பள்ளிக்கூடங்களையும் ஸ்தாபித்து, அங்குள்ளவர்களை தமிழ் கற்க உத்திரவு செய்தார்கள். இம் முயற்சியால் அந்நாட்டினர் பலர் தமிழில் மிக வல்லுனராகி புகழுற்றனர் என்று புறநானூறென்ற சங்கநூலாற் றெரிகிறது. இதுவன்றி மேல் நாட்டரசர்கள் நமது பாண்டிய அரசனுக்குக் கப்பங்கட்டியதாகவும் தெரிகிறது. இதனால் நமது செல்வத் தமிழ் ஒரு காலத்தில் எல்லா நாடுகளிலும் பரவியிருந்ததாக வெளிப்படையாய் விளங்குகின்றது. தற்காலம் ஆங்கிலேயர் ஆண்டுவருவதால் மேல்விளம்பிய தமிழ் மன்னர்கள் போன்று தங்கள் ஆங்கில மொழியை பல நாட்டினும் பரப்ப முயன்றனர். அதனால் சித்தியுமடைந்தனர். அதற்காக நாஞ்சிறிதும் பொறாமையுறல் கண்ணியமாகா. அன்னார் காரியத்தை அன்னார் புரிந்தனர். நமது காரியத்தை நாஞ் செய்யாது ஏமாந்தோம். இதற்கன்னியரை நோவதால் ஆவதென்னை? நீதி மன்றத்தும் ஆங்கிலம் பேச வேண்டியிருக்கின்றதே. ஆங்கிலங் கல்லா தென்புரிவதென வினவலாம். ஆங்கிலங் கற்கவேண்டாமென எவருமியம்பவில்லை.

ஆங்கிலத்தை மாத்திரம் கற்றுவிட்டு, தாய்மொழியை முழுவதும் மறந்து ஏளனமுஞ் செய்தல் என்ன நியாயமென்றுதான் வினவுகிறேன். இச்செய்கை நமது வருங்கால ஏழ்மைத்தனத்தை ஆனை மணியோசைபோன் றறிவிக்கின்றதல்லவா? இவ்வறிக்கை நம்மவர் காதுகளுக்கு ஏன் கேட்கவில்லை? ஆங்கிலத்தக்கை அடைத்துக்கொண்டதோ? (தொடரும்.)

# வேளாண்மை.

தேத்தாகுடி, உபாத்திமைச் சங்கம் காரியதரிசி
R. தர்மராஜ அய்யர் அவர்கள் எழுதியது.

கடவுள் உலகங்களையு முண்டாக்கி, அதிலடங்கிய சகலான்மாக்களுக்கும் பசியையுமுண்டாக்கினார். அப்பசியினால் ஆன்மகோடிகள் படுந்துன்பம் பகரற்பாலதன்று. நகருஞ் சக்தியற்ற ஓரறிவுள்ள புல் பூண்டு மரமாதிகளும் அவைகளுக்குற்ற ஆகார மடையாவிடின் பசியால் வாடி உயிர்விடுகின்றன. இடம்பெயர்ந்தேகுஞ் செயலுள்ள ஏனை ஆன்மாக்களனைத்தும் பசிநோய் தணித்தற்காகப் படும்பாடு பகராது கண்கூடாய்க் காணப்படுகின்றனவே. குறுகக் கூறுமிடத்து உலகத்திற் காணப்படுவதனைத்தும் பசியாற்றலுக்கே யாகின்றன. சகல தொழில்களும் பசியாற்றலுக்கே புரியப்படுவனவாயிருக்கின்றன. பசியை வெறுத்து அரிய தவம் புரிவோரும் ஒரு சமயத்தில் சருகாதிகளை யுண்டு பசியை அடக்குகின்றனர். ஆனதால், பசியை வென்றார் பாரகத்தேயில்லை யெனவே யுரைக்கலாம்.

ஆனதால், எவராலும் வெல்ல வியலாத பசியின் கொடுஞ்செயலை ஒருவாறு அடக்கிவைத்தற்கு ஏதேனுஞ் சூட்சியுண்டோவென ஆராயின், "மரம் வைத்தவன் தண்ணீரூற்றுவான்" என்ற முதுமொழியொப்ப, பசியைப்படைத்த பரம்பொருளே அதை யடக்கியாளவும் ஓர் மார்க்கம் உண்டாக்கியுளார். அது

தான் பசியுடன் யுத்தம் புரிந்து வெல்லக்கூடியது. அதுதான் பசியை அடக்கவல்லது. அதுதான் மனிதர்க்கு எளிதிற் செய்யக்கூடியது. அது பரோபகாரச் செயலுடையது. அதுதான் எத்தொழிற்கும் ஈடற்றுப் பிரகாசிப்பது. அதுதான் உலகத்தார் பசியை ஓட்டக்கூடியது. அதுதான் எல்லா வான்மாக்களையும் திருப்தியுறச் செய்வது. அதுதான் "வேளாண்மை".

வேளாண்மைத் தொழிலுக்கு ஒப்புரைக்க உலகத்தில் ஒன்றுமேயில்லை. ஏனெனில், அதனிடத்திற்றான் பசியை வெல்லுஞ் சக்தி பொருந்தியது. அரசனாகவிருத்தலும் ஓர் காலம் பசியால் வாடநேரும். வேளாண்மையன்றி வேறு தொழிலால் மேன்பட்டாலும், அது ஆற்றினருகுற்ற மரமொப்பும். வேளாண்மையோ ஆதித்தன் சோமனுள்ளமட்டும் அழியாதிலங்கும். எத்தொழிலுக்கும் ஒரு காலத்தில் அழிவுண்டு.

> "ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
> வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—யேற்றம்
> உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
> பழுதுண்டு வேறோர் பணிக்கு".

என்ற, நம் பாட்டியின் திருப்பாட்டு ஈண்டேற்ற சாக்ஷிய மாவதறிவீர்.

வேளாண்மையால் வரும் செல்வம் ஒன்றே நீடூழி நிலைத்து நிற்பது. ஏனைய தொழிலா லீட்டும் பொருள்கள் ஓர் காலத்தில் இடந்தெரியாதேகும். ஏனெனில், இவ்வேளாண்மைத்தொழிலொன்றே அன்னியருக்கு அணுவும் இடுக்கண் விளைவிக்காது, தானாக நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாகப் பெருகக்கூடியது. ஏனைய தொழில்களெல்லாம் பிறருக்கு இன்னலளிக்காது ஈட்டுஞ்செயலற்றது.

வேளாண்மைக்காரரின் திருவாய்ந்த ஏர் நடந்தாற்றான் அரசனின் செங்கோல் நடக்கும். ஆலயங்களில் பூசை நடக்கும். திருவிழா நடக்கும். வடமொழி, தென்மொழிச் சங்கம் நடக்கும். முத்தமிழ் நாடகம் நடக்கும். அந்தணர்களின் யாகம் நடக்கும். தருமம் நடக்கும். விருந்து நடக்கும். ஆங்காங்கு பள்ளிக்கூடங்கள் நடக்கும். இல்லறம் நடக்கும். துறவறம்

நடக்கும். மங்கள காரியம் நடக்கும். பலானவாத்தியங்கள் நடக்கும். கற்றோரின் அறிவு நடக்கும். வியாபாரம் நடக்கும். ஆச்சர்யப்படத்தக்க நூதன காரியங்கள் நடக்கும். எவராலும் வெல்லவியலா பசி நடக்காது. இந்தக் கொடிய பசியின் வல்லபத்தை அடக்குவதற்கு வேளாண்மை ஒன்றேதான் வஜ்ராயுதம். வேளாண்மைக்காரரின் ஏர் நடக்காவிட்டால் மேல் விளம்பிய மேலான காரியங்கள் எதும் நடக்காது. பசிதான் நடக்கும்.

வேளாண்மை புரிவோர்க்குத்தான் நற்குண நற்செய்கை தானே பொருந்தும். இப்பணியாளர்க்குத்தான் யாசித்தலின் இழிவு தோன்றும். எவ்வித புண்ணிய காரியமாக விருப்பினும், த ன் னு யி ர் க் கே கேடு சம்பவிப்பதாயினும் யாசிக்க மனங் கொள்ளார்.

"இல்லாரிரப்பதும் இயல்பே யியல்பே".

என்றபடி, பசியை அடக்க வழியறியார் வறுமைத்துன்பத்தால் வந்து யாசிக்கின், கேட்கு முன்னரே குறிப்பறிந்து அவர்கள் மனங்குளிரும்படி வேண்டிய தளித்துத் தருமத்தை நிறுத்துவர். இவர்களது அனுபவங் கண்டுதான் பொய்யாமொழிப் புலவரும்,

"இரவார் இரப்பார்க் கொன்றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்".

எனச் செப்பியுளார் போலும். மக்களாய்ப் பிறந்து, பிறரைத் தொழுது, அவரிட்ட வேலைகளைப் புரிந்து, அவர்கள் மனம் வந்தபோது தந்த சில பொருளைப்பெற்று, கடையிற்கொடுத்து, அரிசி வாங்கிச் சமைத்துண்டு உயிர்காத்து, மீண்டும் அடிமை வேலை புரிவதைக் காட்டிலும், வேளாண்மையே சிறந்ததாம். அஃதேனெனிலோ, பிறருதவியைக் கருதாது, தங்கள் கை கால்களே தமக்குதவியாய், வேளாண்மைத்தொழில்களை தமதிஷ்டப்படி புரிந்து, அதனால்வரும் வருமானத்தில் தருமத்திற்கும் தனக்கும் வைத்துக்கொண்டு, எஞ்சியதை அரசனுக்கும் ஏனையோர்க்கும் அளித்து, நாட்டிலுள்ள பசி நோயை வேரோடு களைந்து பெருங்களிப்புடன் வாழுந்திறத்தால். அதுகண்டுதான் நாயனாரும்,

" உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர் ".

எனக் கூறினமை காண்க. வேளாண்மைத் தொழிலாளர்க்குத் தக வேந்தனையும் விளம்ப வியலா. அஃதெவ்வாறெனின், அரசன்தான் செங்கோலை நடத்தாது வாளாவிருப்பின் வேற்றரசன் வென்று அரசைக் கைப்பற்றுவான். அக்காலம் அவ்வரசனின் குடும்பம் மட்டுமே துன்புறும். மந்திரி தன் தொழில் புரியாவிடின், வேறொருவனை மந்திரியாக அரசனமைப்பான். அதனால் மந்திரியின் குடித்தனம் மட்டும் வாடுறும். வணிகர் தங்கள் தொழிலைப் புரியாது நிற்கின், வருவாயின்றி அவர்களே தத்தளிப்பர். உழவுத் தொழிலோர் தங்கள் தொழிலை நிறுத்துவரேல் உலகமே துன்புறும். சுருங்கக்கூறின், கடவுளின் முத்தொழிலுமே முறையோடு நடைபெருது. இதனுண்மையை ஆராய்ந்துதான் தெய்வப் புலவரும்,

" உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை ".

என்று மொழிந்தனர் போலும்.

" தொழுதூண் சுவையினும் உழுதூண் இனிது " என்றவாறு சேவகாவிருத்தியாற் றேடியுண்பதிலும், வேளாண்மையாலீட்டுண்பதே உயர்வு என வுணரக்கிடக்கின்றது.

ஏனைய தொழிலால் எவ்வளவு வருமானம் பெற்றாலும், உழுதுண்பாரின் திருவாயிலுக்குச் சென்று, காத்திருந்து அவர்கள் தரும் உணவுப்பொருளை வாங்கிவந்துதான் ஒரு சாண் அகட்டை நிரம்பச்செய்யவேண்டும். இச் செயலை முழுவதுமனுபவித்தே தான் " ஒதுவாரெல்லாம் உழுவார் தலைக்கடையே " என இயம்பினர்.

இணையற்ற புகழெய்திய வேளாண்மைத் தொழில் புரியாது ஏனைய வறிய தொழில்களுக்காசைகொண்டு முற்றுப்பெருது ஏழ்மையால் வாடுபவரை, பதரென்றே அதிவீரராம பாண்டியன் கூறினர்.

" வித்தும் எரும் உளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே ".

என்றதனு லுமுணர்க.

இவ்வாறு எல்லாப்படியானும் புகழெய்து விளங்கும் உழவுத்தொழிலில் புகுந்தால் மட்டும் போதுமா? அதற்கான சுருதி, யுக்தி, அனுபவங்களில் முழுவதும் பழகி செவ்வனே தொழில்புரிய வேண்டும். வேளாண்மைத் தொழிலாளர்க்கு நிறைந்த கல்விவேண்டும். இதற்கேன் கல்வியெனச் சிலர் வாது புரிவர். இவர்கள் வாது வீண் வாதே. கல்வி யில்லாரின் எத்தொழிலும் ஓர் குறையை யெய்தாதிராது. கல்வியறிவின் உதவியின்றிச் செய்யாத வேளாண்மையும், முழுப்பலனை அளிக்கவே யளிக்காது. ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு மேலான அறிவைப் பெற்றிருக்கின்றானோ, அதற்கேற்பவே ஊதியமும் பெறுவான். நிற்க, பயிரிடும் நிலத்தில் விதை தெளிப்பது மட்டும் முக்கியமன்று. அந்நிலத்தை, முன்பே செவ்வனே நிலத்திற் கேற்றவாறு பண்படுத்தல்வேண்டும். பண்படுத்தும் முறை பலவுள்ளன. அவையனைத்தும் ஈண்டுரைப்பதெனில் விரியும். அதற்கான நூல்கொண்டு தெளிக. முக்கியமாக இரண்டொன்று கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

" தொடிப் புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும் ".

என்றார் வள்ளுவரும்.

அதாவது, ஒருவன் உழவு தொழிலை விரும்பிப் புரியப் புகுவானேல், முதலில் அந்நிலத்தைச் செவ்வனே உழுது புழுதி யாக்கல் வேண்டும். அதுவும், ஒரு பலம் நிறையுள்ள புழுதியை காற்பலமாகக் காயச்செய்து, பின்னர் விதையை விடின், ஒரு பிடி எருக்கூடப் போடாமல் விளையவேண்டிய முழுவது விளையு மென்றனர். இவ்வாறின்றி, முன்னால் உழவேண்டிய சாஸ்திரத்திற்குமட்டும், தாறுமாறாய்க் கீறிச்சென்றால், விளைவும் சாஸ்திரத்திற்கென ஏதேனும் விளையும். அக்காலம் விளைவு குறைந்ததேயென வருந்துவதால் பயன்றருமா? அது

நிற்க. மேற்கூறியவாறு செய்தால் மட்டும் போதும். எரு வேண்டியதில்லையென்றே யெண்ணிவிடக்கூடாது. அவசியம் எருவிடல்வேண்டும். இடும் எரு அந்நிலத்திற் கேற்றனவா வென்பதை நன்கு ஆராய்ந்து இடல்வேண்டும். பிறகு ஏற்ற விதை தெளித்துக் களை பிடுங்கல் வேண்டும். பிறகு அப்பயிரை ஆடுமாடுகள் முதலியன அழித்துவிடாமல் கண்ணைக்காக்கும் இமைகளைப்போன்று காப்பதொன்றே நீர்ப்பாய்ச்சலுக்குச் சமமாகும்.

"செல்லான் கிழவனிருப்பினிலம் புலந்
தில்லா ளினூடி விடும்".

என்ற பெரியார் வாக்கொப்ப, நிலத்திற்குரியவன் சாகுபடி காரியங்களில் தானேநேரில்சென்று செவ்வனே செய்யவேண்டியதைச் செய்யாது, அயலானை அனுப்பிவிட்டுச் சோம்பலுடன் இருப்பானேல், அந்நிலம் மனையாளைப்போன்று தன்னுள் வெறுத்து பிணங்கிக்கொள்ளுமாம். அதாவது, வேளாண்மைத் தொழிலுக்கு வேற்றாளை அனுப்பிவிட்டு இருந்தால், நடத்த வேண்டிய காரியங்கள் செவ்வையாக நடைபெறாதென்க. செய்வனதிருந்தச்செய்யாததால் வருவாயுஞ் சுருங்குமென்க. இது கருதியேதான், தன்னைக் கவனிக்காதிருக்கும் புருஷனிடத்தில் எவ்வாறு மனைவி பிணங்கிக்கொள்வாளோ அவ்வண்ணமே நிலமும் பிணங்கு மென்றனர். இல்லாள் வருத்தமுறின் உணவின்றி வாடவேண்டும். நிலம் பிணங்கின் உணவுப் பொருளின்றி வாட்டமுறல்வேண்டும். மனைவி நமதிடத்தின் முழுவன்புடனிருக்க, அவளருகிருந்து மனமுவப்ப எவ்வண்ணம் நடந்து கொள்ளுகிறோமோ, அவ்வாறே நிலமும் நம்மிடத்து பூர்ண வன்பு வைத்து பூர்ண விளைவைத் தருவதற்கு அருகிருந்தே யாவுமியற்றல்வேண்டும். இவ்வண்ணம் பூமியினிடத்து முழுவன்புவைத்துப் புரிவன புரிந்து பசிக்காதுண்ணுமல், வறிதே சோம்பித்திரிந்து பொழுது போக்கி, யான் ஏழ்மையால் வருந்துகிறேனென்னும் ஒருவனை, பூமிதேவியானவள் பார்த்துக் கலீரெனச் சிரிப்பாளென்று நாயனுர் கூறினர்.

"இலமென் றசைஇ யிருப்பாரைக்காணி
னிலமென்று நல்லா ணகும்".

ஆகையால், நம்மவர்கள் எத்தொழிலினும் பூமி திருத்தியுண்ணலே நற்றொழிலெனக் கருதி, அதற்காங் காரியத்தைச் சோம்பலின்றி யியற்றி, நம்மிடத்தே ஏழ்மையை அணுகவொட்டாது அகற்றி, யாவரையுங் காப்பவர்கள் வேளாண்மைத் தொழிலோர் எனும்மொழியை நிலைநிறுத்தி, இரப்பார்க் கீந்து, பசியெனுங் கூற்றுவன் நம்மவரையே பற்றாது துரத்தி, தருமத்தை நிறுத்தி, பகவான் திருவடிகளை உளத்திலிருத்தி, நீடூழி செல்வமும் புகழு மோங்க வாழ்வோமாக. சுபம்!

---

# தீபாவளிப் பண்டிகை கொண்டாட்டம்.

தேத்தாகுடி, தர்ம முதல்தர ஆரம்ப பாடசாலை, தலைமை உபாத்தியாயர் C. N. நாகநாதன் அவர்கள் எழுதியது.

---

மாலை மணி ஐந்து. குடகடலிற் குளிக்கப்புகும் சூரியன் தன்மக்களாம் மாந்தர்க்குத் தன்னரும்பொன்னாகிய கிரணங்களை அவர்க ளகமகிழ அள்ளி இறைத்தனன். நக ரனைத்தும் பொன்னாற் போர்த்தப்பட்டதுபோற் பொலிவுற்று விளங்கியது. கதிரவனைச் சூழாநின்ற கார்மேகங்கள் தாம் அவனொளியாற் றிருமேனி யுற்றதை மறந்து, நம தியற்கை யழகே இதுதான் போலுமென ஐயுற்று நின்றன. பகல் முழுவதும் பறந்து திரிந்தும் பழத்தைக் கண்ணுறாத பறவை இனங்கள், மேற்றிசையிற் றோற்றுவது கனிதானெனக் களிப்புற்றுக் கூட்டங் கூட்டமாகப் போட்டியிட்டு விரைந்து பறந்தன. இக்காக்ஷி யனைத்தையும் கண்டு களிக்கக் கழுகு ஜாலங்கள் வானளாவி வட்டமிட்டுத் திரிந்தன. தமக்கு மரணத்தை விளைவிக்கும் மானிடர்க்குத் தங்களிருக்கையை அறிவிக்கப் பயந்து கூவாத குயிலினங்கள் மெய் மறந்து கூவித் தங்களைத் தாங்களே காட்டிக்கொண்டன.

தெருக்களில் மக்கள் அங்குமிங்கும் ஓயாது சென்றவா றிருந்தனர்.

கோபாலையர் புது ஜவளிமூட்டையுடன் வீட்டில் நுழை கிருர். தெருவில் நின்றுகொண்டு எதிர்வீட்டுப் பாலு சுட்டுக் கொண்டிருந்த பட்டாஸைக் கழுகுக் கண்ணுடன் பார்த்துக் கொண்டிருந்த அவரது குமாரர்களாகிய பிச்சுவும், முத்துவும் தங்கள் தந்தையைக் கண்டதும் சந்தோஷக் கூச்சலுடன் தங்களுக்கெட்டாத தந்தையின் கரங்களைத் தாவிப் பிடித்துக் கொண்டு வீட்டில் நுழைகிருர்கள். அதோ, தனக்குப்பட்டாஸ் வாங்கிவர அப்பாவிடஞ் சொல்லும்படி சேஷு தன் தாயின் முன்னின்று சிணுங்குகிருன். "கிடாமாடுபோல் பன்னிரண்டு வயதாகி இன்னும் என்னடா உனக்குப் பட்டாஸ்" என்று திண்ணையிற் போர்த்துக்கொண்டு வெறும் வாயை மென்று கொண்டிருக்கும் அவனது தாத்தா அவன்மேல் சீறிவிழுகிருர். "எங்கப்பா இரண்டு கட்டு பட்டாஸ் வாங்கிக்கொண்டு வந் திருக்கிருரே" என்று ராமுடு அண்டை வீட்டு மணியிடஞ் சொல்லி அவனை அழவிட்டுத் தான் திருப்திப்படுகிருன். 55 வயதுள்ள மாடிவீட்டுச் சுந்தரமய்யர் துடைப்பக்குச்சியின் நுனியில் பட்டாஸைச் சொருகிக்கொடுத்து, தன் ஏகபுத்திரி யாகிய மூன்றுவயதுள்ள ஜானகியை சுடச்செய்து சந்தோஷப் படுகிருர். பட்டாஸ் வெடித்ததும் பயந்து ஜானகி யழுகிருள். தன் கணவன் சுந்தரமய்யர் வாங்கிவந்திருந்த பெங்களூர் தலைப்பு, ஜரிகைக் கொட்டடிப் புடவையைக் கனபாடிகளாத்துக் கமலத்துக்குக் காட்டிக்கொண்டிருந்த மங்களம், குடு குடு வென்று ஓடிவந்து ஜானகியைத் தூக்கித் தன் இடுப்பில்வைத்து அவளைச் சமாதானம் செய்துகொண்டு, சுந்தரமய்யரைக் கடு கடுத்த முகத்தோடு கண்டிக்க, அவர் பாம்பைக்கண்ட எலிபோல் பதுங்குகிருர். நிற்க, வானம் கறுத்தது. நக்ஷத்திரங்கள் ஒவ் வொன்ருக எட்டிஎட்டிப் பார்த்துக்கொண்டிருந்தன. படாஸ் சத்தம் தெருவில் பலத்துவிட்டது. எல்லோரும் தீபாவளியைக் குதூகலத்துடன் எதிர்பார்த்திருந்தனர்.

ஆனல் அதே தெருவில் 23-ம் நம்பர் வீட்டில் வசிக்கும் கோதண்டராமய்யர் மனைவி கற்பகத்தின் முகம் கடுகடுவென்

றிருந்தது. கூடத்தில் சுமார் ஒன்பது ரூபாய் பெறுமான புதிய மதுரைச் சுங்கடிப் புடவை பிரித்து உதறி எறியப் பட்டிருந்தது. கோதண்டராமய்யர் மௌனத்துடன் திண்ணையில் உட்கார்ந்திருந்தார். அவரது புத்திரி சுமார் பன்னிரண்டு வயதுள்ள சுவர்ணம் தாய்தந்தையர்கள் கோபமுற்றிருப்பதனுல் விசனித்து ஓர்புறம் நின்றுகொண்டிருந்தாள். அவரது பத்து மாதத்துக் குழந்தை மாந்தர்களுடையும் க்ஷணதுக்கத்தையும், க்ஷணசந்தோஷத்தையும் அசட்டைசெய்வதுபோலும், பரிக சிப்பதுபோலும், இவ்வுலகிற்கும் தனக்கும் சம்பந்தமில்லை போலும், தனக்குத்தானே சிரித்தும் மகிழ்ந்தும், தாதாவென்று கத்திக்கொண்டு விளையாடிக்கொண்டிருந்தது. அவரது ஏழுவயதுள்ள ராமு தாயிருக்கிற நிலைமையை அறிந்துகொள் ளாமல் அவளருகிற் சென்று 'அம்மா' பட்டாஸ் இல்லையா என்றுன். கற்பகத்திற்கோ வந்துவிட்டது கோபம். கைசலிக்கிற வரையில் இதுதான் பட்டாஸ் என்று சொல்லிக்கொண்டே ராமு அலற அலற அவன் முதுகில் அறைந்தாள். தடுக்கப்போன சுவர்ணத்திற்குப் பத்தறை விழுந்தது. திண்ணையில் உட்கார்ந் திருந்த கோதண்டராமய்யருக்குப் பொறுக்கமுடியவில்லை. அவளைச் சக்கைவேறு சாறுவேருகப் பிழிந்துவிடுகிறேன் பார் என்று முணுமுணுத்துக்கொண்டே உள்ளே சென்றுர். ஆனுல் கற்பகத்தைக் கண்டதும் இவருக்கு சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. ஆனுல், மனைவிமேல் எழுந்த கோபத்தை அடக்க முடியாமல், உனக்குத் திருப்தியாகப்போகட்டுமென்று சொல் லிக்கொண்டே, ராமு இல்லையப்பா, எனக்கு பட்டாஸ் வேண் டாம் வேண்டாம் என்று கதறக் கதற அழுமாறு முதுகிலும் முகத்திலும் தன் சக்தியானுசாரம் சாத்திவிட்டு, தீபாவளியெல் லாம் ஆய்விட்டது. பக்ஷணத்தையெல்லாம் எடுத்து மாட்டுத் தாழியில் போடு. மாப்பிள்ளையும் காணும். அவனும் இனி மேல் வசமாட்டான். உன் மூஞ்சிக்கு மாப்பிள்ளைவேறு வைத் திருக்கிறதா என்று விஸ்வாமித்திரர்போல் கோபித்தார்.

கோதண்டராமய்யருக்கு, கற்பகம் எள்ளளவும் சளைத்தவ ளல்ல. "ஊரெல்லாம் இப்படித்தான் தீபாவளி செய்கிறுர்களா? வருஷத்துக்கொருநாள் ஒரு உயர்ந்த புடவை வாங்கினுலென்ன?

மங்களத்து ஆம்படையானுமிருக்கிறுன். நீங்களுமிருக்கிறீர்களே. இந்தப் புடவையை எவள் கட்டுவாள்? பள்ளத்திகூட தீபாவளிக்கு பதினைந்து ரூபாய்க்குக் குறைந்து புடவை வாங்க மாட்டாள். அப்படிப்பட்ட தீபாவளி வேண்டாமே" யென்று இந்தப்புறம் எட்டு வீடு, அந்தப்புறம் எட்டு வீடு இடியும்படியாகக் கத்திக்கொண்டிருக்கையில், இவைகளனைத்தையுங் கேட்டுக்கொண்டே மாப்பிள்ளை வந்து அவர்களுக்கெதிரில் நின்றுன். அப்பொழுது கோதண்டராமய்யர் முகமும், கற்பகத்தின் முகமும், சுவர்ணம் முகமும் எவ்வாறிருந்திருக்குமென்பதை வாசகர்கள் தங்கள் மனக் கண்ணுல் பார்த்து ஆநந்திப்பார்களாக.

ஆனுல் தொட்டிலிற் கிடந்த குழந்தையோ இப்படிப்பட்ட தீபாவளிக் கொண்டாட்டத்தை அலக்ஷியஞ்செய்வதுபோன்று அன்றலர்ந்த தாமரையின் பிரஸன்ன முகமுடையதாய் விளங்கிக் கொண்டிருந்தது.

---

குறிப்பு:—வாசகர்காள்! இக்கட்டுரையின் அமைப்பு ஒர் நவீனம்போன்று திகழ்கின்றது. இது வரைந்த அன்பர் நாகநாதன் அவர்கள், கற்பனுலங்காரம் மிகுந்த நவீனங்களியற்றக் கூடுமென்பதையும் விளக்குகின்றது. கதை முகத்தானே பல அரிய விஷயங்களை வெளியிடல்வேண்டுமென்பது இவரது மனப்பான்மைபோலும். இக்கட்டுரையின் ஒவ்வொரிடத்திலும், ஆழ்ந்தூகித்தறியவேண்டிய சிலவற்றை எளிதில் விளங்க இயம்பினுர். பலான வழிகளால், செயற்கையினுல் அழகுபெற்று விளங்குபவர்க்கு, தான் இயற்கை யழகோடிருந்த விஷயம் மறந்துபோய், ஆடம்பரம் புரிவார்களென்பதை, சூரியனொளியினுல் மாறுபட்ட கார்மேகங்களா லறிவித்தார். ஒரு பொருளில் பேர்விருப்புற்று அதே சிந்தையாக இரவு பகல் தேடித்திரிபவனுக்கு அப்பொருளல்லாதன வெல்லாம், சிந்தித்த பொருள்போன்று பார்த்தவுடன் தோன்றுவது உண்மைதான் என்பதை, பசியால் மெலிந்த பறவைகள் ஆதவனைப் பழமெனக்கருதி ஒடின வென்பதினுலறிவித்தார். முதுமையால் மதிமயங்கி ஓர் வேலையுமின்றி உட்கார்ந்திருப்போர், சிறுவர்களின் தற்காலநிலையுணராமலும், தாங்கள் சிறுவர்களா யுறும்பொழுது எவ்வணமிருந்

தோமென்பதை யுணராமலும், பையன் மீதும் ஏனையோர் மீதும் கோபித்துச் சடசடவென்று கத்துவார்கள் என்ற அனுபவத்தை சேஷுவைக் கோபித்த தாத்தாவால் உணர்த்தினர். சிறுவர்களின் பெரும்பான்மையான எண்ணம், தனக்குக் கிடைத்த எப்பொருளையும் கிடைத்தவுடன் அன்னியருணராமல் தன்மட்டிலே வுபயோகித்துக்கொள்ளாது, கிடைத்ததைத் தன்போன்ற சிறுவர்களுக்குக் காண்பித்து, "இது அப்பா கொடுத்தா, அம்மா கொடுத்தா" என்று சொல்லி, கேட்ட பையன் எனக்குத் தாவென்று கேட்டோ, வேறெவ்வகையாலோ அழத் தொடங்கியதும், தான் மிகவும் சந்தோஷப்பட்டு உண்ணக்கூடிய தாயின் உடனே வாயில்வைத்துக்கொண்டு ஓடிச் சந்தோஷப் படுகிற வழக்கம், சிறுவர்கள் எல்லாரிடத்து முண்டென்பதை ராமுடு, மணி மூலமாக அறிவித்தார்.

> "மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை".

என்றவாறு, இல்லறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கையோடு தன் மணாளன் வரவுக்குத் தக்க செலவு செய்பவள் இல்லறத்திற்கு இன்றியமையாத் துணையாவா ளென்பதையும், அவ்வாறின்றி "இல்லாள் வலிகிடந்த மாற்ற முரைக்குமேல் அவ்வில் புலிகிடந்த தூறாய் விடும்" என்ற விபரத்தையும், வரவறியாத அடக்கமிலா மனைவியுடன் கூடி வாழ்தல் மானம் போவதுடன், ஒரு விசேஷ காலங்களிற்கூட விசாரமின்றி வாழமுடியாதென்பதையும், துர்க்குணப் பெண்டிரால் சதா சஞ்சலப்பட்டுத் துக்கத்துட்படிய நேருமென்பதையும் கற்பகத்தின் நடத்தையால் காட்டினர். சிறுவர்களுக்கும், விருந்தாளிகளுக்கும் யாசகர்களுக்கும், அரசர்களுக்கும் இருப்பும் இல்லாமையும் தெரியாதென்பதையும், சிறுவர்களுக்குப் பிறரிருக்குஞ் சமயந் தெரியாதென்பதையும் ராமுவின் செய்கையால் அறிவித்தார். ஆண் பிள்ளைகளைவிட பெண் பிள்ளைகளுக்கு இளம்பிராயத்திலேயே பிறர் நிலைமையை யறியுஞ் சக்தியும், குடும்ப நிலைமையை யறியுஞ் சக்தியு முண்டென்பதை, சுவர்ணம் என்ற சிறுமியினாற் காட்டினர். பிடாரியைப் பெண்டாகக் கொண்டவர்கள் மானத்தைக் காப்பாற்றக் கருதி, தனது கோபத்தைக் குற்றமற்ற சிறார்

மீது தாக்கியும், கருடனைக்கண்ட பாம்புபோல் மனையாளுக்குப் பயந்துந்தான் வாழவேண்டிவருமென்பதைக் கோதண்டராமய்ய ராலும், சுந்தரமய்யராலும் விளக்கினர். அநேக குடும்பங்கள், மனமங்களமாக விருக்கவேண்டிய சுபதினத்திலுங்கூட, துக்கங் கொண்டாடிக்கொண்டு கஷ்டப்படுகின்றன வென்பதை கோதண்டராமய்யரின் குடும்பத்தின் தீபாவளி தினத்தை உதாரணங்கூறினர். மழலை மொழியவுந்தெரியாத கைக்குழந்தை களின் மனம் நிர்மலமான தென்பதும், பளிங்கியைப்போன்று மாசற்றதென்பதும், நன்மை தீமை தெரியாததென்பதும், கோபம், சந்தோஷம் அறியாத தென்பதும், துக்கமற்ற தென்பதும், பொய், சூது, வாது, அகங்காரம், பொறுமை, பேராசை முதலிய துர்க்குணங்கள் ஏதுமில்லாத தென்பதும், சிசுக்களின்மனதைப் போன்ற, பரிசுத்தமனதைப் பெறத்தான் ஞானிகள் பாடுபடுவ தென்பதும் பாலொழுகுஞ் சிறுகுழவிகளின் செய்கைதான் பரம் பொருளையறிந்து அடங்கியிருக்கும் அடியார்களின் செய்கையு மென்பதற்குத் தொட்டிலிற்கிடந்த மதலையாற் காட்டினர். இத் தகைய அரிய விசேடணங்களை அறிந்துகொள்ளவே கட்டுரை புனைந்தா ரென்பது வெளியாகின்றது. "தீபாவளிக் கொண்டாட் டம்" எனக் கட்டுரைக்குப் பெயர்கூறி தீபாவளியின் விசேஷத் தைக் கூறாதுசென்றது எற்றுக்கோவெனின் தீபாவளிக் கொண் டாட்டம், நரகாசுரன் சம்பந்தமாகச் செய்வதென்றும், அற்பிசி மாதத்தில் வரும் கிருஷ்ணபக்ஷம் சதர்த்தசி இரவின் இறுதியில் எண்ணெய் இட்டுக்கொண்டு வெந்நீரில் மூழ்கி, புதியவுடை யணிந்து, பலகாராதிகளை நிவேதித்துண்டு, தீபாவளியைக் கொண்டாடாதவனுக்குத் தீய நரகம் நிச்சயஞ் சம்பவிக்கு மென்று வயித்தியநாத தீக்ஷிதம் முதலான நூல்கள் சொல்லி யதைக்கொண்டு, இந்துமதத்தினர் அவ்விசேடதினத்தின் மகிமையை பண்டைநாளே அறிந்து, தொன்றுதொட்டுக் கொண் டாடி வருவதால், அறிந்ததையே அறைவதை மிகையெனக் கூறாது விடுத்தனர்போலும். மேற்கூறிய விசேஷங்கூறற்குத் தீபாவளியைக்கூறுவானேயெனில், இந்துக்களுக்கு தீபாவளியே

முக்கியமான கொண்டாட்ட மாதலால் அத்தினத்தையுங்கூடச் சில அடங்காப்பெண்களால் துக்கநாளாக்கிக்கொண்டு, துயரமுற நேரிடுகிற தென்பதை வெளியாக்கவேயாகும்.

ஆகையால், இக்கட்டுரையாற் கண்ட நீதிகளை நினைந்து, வருவாய்க்குத் தக்க செலவு புரிந்து, கிடைத்ததற்கு மகிழ்ந்து, 'வருந்தியழைத்தாலும் வாராது வாரா தெனத்தேறி, கொடிய குணத்தைக் குழியிற் புதைத்து, நற்குணத்தைப் பெற்று வறியோர்க்கழகு வறுமையிற் செம்மை, என்ற நீதிவாக்கியத்தை நினைத்து, நன்மை வந்த காலத்தில் மகிழுவதும், தீமை வந்த காலத்தில் துக்கமுறுவதுமாகிய செய்கையை மறந்து,' எக்காலத்தும் இன்பத்தையே யெண்ணி, எல்லாம் வல்ல இறைவனினருளால் சதா சந்தோஷத்தைப் பெற்று வாழ்வோமாக. சுபம்.

பத்திராசிரியர்.

---

## பலசரக்கு.

ஒரு காலத்தில் நமது தமிழ் மொழி ரோமாபுரி முதலான தேசங்களிலும் பரவியிருந்தது போன்று, இந்து மதத்தில் ஒன்ருகிய சிவமதமும் அன்னிய நாடுகளிலெல்லாம் பரவியிருந்ததாகத் தெரிகின்றது. கீழ்க்காணும் தேசங்களில் சிவாலயங்கள் இன்னும் காணக்கிடைப்பதால் தகுந்த சாக்ஷியமாகின்றது.

1. வட ஆப்பிரிக்கா கண்டத்துள் ஈஜிப்ட் தேசத்திலுள்ள மெம்பீஸ் நகரத்தில், நந்தி வாகனன் திரிசூலம் சாம்பவாக்ர சர்ப்பாம்பரதாரியான பரமேஸ்வர விக்ரகமும்,

2. பாபிலோன் பட்டணத்தில் 1200 அடி உயரமுள்ள சிவலிங்கமும்,

3. ஹைட்ரோ போலீஸ் என்னும் பட்டணத்தில் 600 அடியுள்ள சிவலிங்கமும்,

4. மெக்காவில் ஸகமக்கேஸ்வர நாமமுள்ள ஒரு சிவலிங்கமும்,

5. ஸம்ஸம் என்னும் கிணற்றில் ஒரு சிவலிங்கமும் இருக்கின்றன.

6. ப்ரஜில் தேசத்தில் அநேக சிவலிங்கங்களும், விக்நேஸ்வர முகூர்த்தங்களும்,

7. காரிம்த் பட்டணத்தில் பார்வதி தேவியின் ஆலயமும்,

8. கிளாஸ்கோவில் சுவர்ண கவசத்தினால் போர்க்கப்பட்ட ஒரு சிவலிங்கமும்,

9. பிரிஜியன் தேசத்தில் ஏடன் என்னும் சிவலிங்கமும்,

10. வினியா, யகோதி, சித்ரால், காபூர், பலக், புகார் முதலான இடங்களில் அநேக சிவலிங்கங்களும் இருக்கின்றன. அங்குள்ள ஜனங்கள் பஞ்சாக்ஷர பஞ்சவீர வென்னும் பெயரால் அழைத்தும், அர்ச்சித்தும் வருகின்றார்கள். மற்றும் அண்டாண்டங்களிலும் இலங்கை முதலிய தீபாந்திரங்களிலும் வீரசைவ பஞ்சாச்சாரியர்களால் கோடிக்கணக்கான இலிங்கங்களை ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன வென்றும், முசிரியினின்றும் வெளியாகும் "வீரசைவம்" என்ற மாதப்பத்திரிகை கூறுகின்றது.

***

தேத்தாகுடி, தர்ம, முதல்தர ஆரம்பப் பாடசாலையில், இவ்வாண்டு, நவராத்திரி உத்ஸவம் பத்துத்தினங்களிலும் வெகுவிமரிசையாக, R. V. சர்மா அவர்களால் நடத்தப்பட்டது. தேர்ச்சி பெற்றோர்களால் புல்லாங்குழல், பாட்டுக்கச்சேரி மிருதங்கத்துடன் நடந்தது செவிகளுக்குப்பெருவிருந்தாகியது. சம்போடை K. செங்கசாமி அய்யங்கார் அவர்களின் ஸ்கூலில், ஆண்டுதோறும் நடந்துவந்ததுபோலவே, இவ்வாண்டும் நவராத்திரிக் கொண்டாட்டம் வெகு சிறப்பாக நடந்தேறியது.

***

வேதாரண்யம் க்ஷேத்திரத்தில் ஸ்ரீ அப்பாள் சந்நிதியில், வழக்கம்போன்று இவ்வாண்டும் நவராத்திரி உத்ஸவம் பலான அலங்காரங்களுடனும், மேளக்கச்சேரி, நடனக் கச்சேரிகளுடனும் வெகு விமரிசையாக நடக்கப்பட்டு, பலவூர் ஜனங்களும் அம்பிகை தரிசனங்கண்டு மகிழ்ந்தார்கள்.

# கலாநிதிச் சேவகன்.

கலாநிதிக் கன்புடையீர் !

கலாநிதிக்கு நிருப மெழுதும் நேயர்கள் நமது கலாநிதி ஆபீஸ் மானேஜருக்கு அதிக வேலையை அளிக்காது, காகிதச் செலவைக் கருதாமல் காகிதத்தின் ஒரு பக்கத்தில் வரி நெருக்க மில்லாமலும், கூட்டெழுத்து, சிக்கெழுத்தில்லாமலும், தனித் தனி எழுத்தாக எளிதில் விளங்கும்வண்ணம் எழுதவேண்டும்.

சந்தா நம்பரைக் குறிக்காது கடிதமெழுதுகின்றார்கள். இனி சந்தா நம்பர் எழுதாத காகிதங்களைக் கவனிக்க இயலாது. பத்திரிகை வரும்போது விலாசத்தின் தலைப்பிலுள்ள நம்பரை அவ்வவரின் சந்தா நம்பரெனக் குறித்துக்கொண்டு, அந்த நம்ப ரையே காகிதமெழுதும்போது குறிப்பிடுமாறு கேட்டுக்கொள் ளுகிறேன்.

நமது 'கலாநிதி' பத்திரிகை சரியாகக்கிடைக்காவிட்டால் இன்ன மாதப் பத்திரிகை கிடைக்கவில்லையென்று சந்தா நம்ப ருடன் லெட்டர் மூலம் அறிவித்தால் உடனே பத்திரிகை அனு ப்பிவைப்போம். கடிதம் எழுதாமல் பத்திரிகை கிடைக்கவில்லை யென்று குறைகூறுவதில் பயனில்லை.

நமது பத்திரிகைக்கு சந்தாதாரர்களைச் சேர்ப்பதற்கு கமி ஷன் ஏஜண்டுகள் தேவை. ஏஜண்டாகவிருக்க விரும்புவோர் அறிவித்தால் ஆர்டர் பாரமும் மாதிரிக் காப்பிகளும் அனுப்பப் படும். சந்தாவொன்றிற்கு எட்டணா வீதம் கமிஷன் கொடுக் கப்படும்.

விளம்பரஞ் செய்வோர்களும், தங்களுக்கு வேண்டியதை எழுதியனுப்பினால், அதற்கான ரூபாயை அறிவிப்பாம். இப் பத்திரிகை தமிழ் நாடு முழுவதும் பரவிவிட்டதால் இதில் விளம்பரஞ் செய்வோருக்கு தகுந்த இலாபமுண்டாகு மென்ப தற்கையமில்லை.

சில நண்பர்கள் காலங்கடந்து பத்திரிகை வருவதைப்பற்றி சந்தேகிக்கின்றனர். கூடியவிரைவில் அந்தந்தமாதப் பத்திரிகை அந்தந்த மாதம் பத்துத் தேதிக்குள் வருமென்பதற்கையமில்லை யென்பதறியவும். மேலும் சில பத்திரிகைகளைப்போல் இரண்டு மாதப் பெயர்களை ஒரு சஞ்சிகையில் எழுதிவருமென்று கருதவேண்டாம். வருடம் ஒன்றுக்குப் பன்னிரண்டு இதழ்களும் தவறாமல் வருமென்பதை மீண்டும் கவனிக்கவும்.

இவ்வித சந்தேகங்களைக் கருதி, சிலர் சந்தாப் பணத்தை அனுப்புவதற்கு ஆலோசிக்கின்றனர். அன்பர்கள் எவ்வித சந்தேக ஆலோசனையையுங்கொள்ளாது விரைவில் அவ்வவரின் சந்தாப் பணத்தையும் மணியார்டர் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். எவ்வளவுக்கெவ்வளவு துரிதமாய், சந்தாப் பணங்கள் ஆபீசுக்கு வருகின்றதோ, அவ்வளவு துரிதமாய்ப் பத்திரிகையும் வெளியாக சௌகரியமென்பதை அன்பர்கள் அறியவும்.

பத்திரிகையின் உள்ளிட்ட விஷயங்கள் சம்பந்தமாய், பலர் பலான சந்தேகங்களைக்கொண்டு தங்கள் தங்கள் மனதைப் புண்படுத்திக்கொள்ளுகிறார்கள். உண்மை உண்மையே யொழிய ஒரு சிறிது மாறுபாடில்லை. ஆனதால் அன்பர்கள் அனாவசிய ஐயங்களைக்கொண்டு மனதை அலையவிடாது நிறுத்திக் குணங்களைக் கண்ணுற்று மகிழ்ந்து, ஆசிரியருக்கு அதிக ஊக்கத்தை யளிக்குமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
க. சேவகன்.

## மதிப்புரை.

### "ஆநந்தபோதினி."

இப்பத்திரிகையும் வரவேற்றோம். இதன் பெருமை பல்லாண்டுகளாகத் தமிழ் நாடு அறிந்ததேயாகும். தமிழ் நாட்டில் பெரும்பாலும் ஆநந்தபோதினி இல்லாத இல்லமே இல்லை யென்றால், இதன் பெருமையை யாம் விரிப்பது மிகையாகும். இதன் வருஷ சந்தா ரூபாய் ஒன்றே.

பத்திராசிரியர்.

## "யாதவ மித்திரன்."

இப்பத்திரிகை அன்புடன் வரப்பெற்றோம். இது மது[illegible]நகரத்திலிருந்து மாதந்தோறும் வெளிவருவது. க[illegible]ஷகர், புஸ்தகவியாபாரத்தில் புகழ்பெற்ற, திருவாளர் இ. மா. கோபாலகிருஷ்ண கோன் அவர்கள். இது யாதவர்களின் முன்னேற்றத்திற்கென உழைப்பது. கண்ணபிரானின் சரிதத்தை, எவரும் உணரத்தக்க எளிய செந்தமிழ் நடையால் விளக்குவது. கல்விக்கடலை மாந்திய அறிவாளர்களால் வரைந்த கட்டுரை நிரம்பியது. அச்சடிப்பு முதலியன மிக அழகைத் தருவதாயுள்ளது. தமிழ் நாட்டிலுள்ள யாதவர்கள் ஒவ்வொருவரும் இப்பத்திரிகையைப்பெற்று ஆநந்திப்பது அவசியமாகும். ஏனைய வித்தியா விநோதர்களுக்கும் மகிழ்ச்சியையளிக்குமென்பது திண்ணம். இதன் வருஷசந்தா ரூபாய் ஒன்று.

***

## "வீர சைவம்."

இந்தப் பத்திரிகையும் களிப்புடன் வரக்கண்ணுற்றோம். இது வீரசைவர்களின் முன்னேற்றத்திற்கெனப் பாடுபடுவது. பெரிய மேதாவிகளால் வரையப்பெற்ற கட்டுரைகளைக் கொண்டது. 'முசிரி' என்னும் நகரத்திலிருந்து மாதந்தோறும் வெளியாவது. முசிரி ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதராகிய திருவாளர் (வீரசைவ) வி. குமார வீரய்யர் அவர்களை ஆசிரியராகப் பெற்றது. இது ஒவ்வொரு வீரசைவர்கள் கரத்திலும், ஏனைய புலவர்கள் கரத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இதன் வருடசந்தா ரூபாய் இரண்டு.

***

## "பாரத மித்திரன்."

இப்பெயர்கொண்ட பத்திரிகை நமது பார்வைக்கு வரப்பெற்றோம். இது சோமவாரந்தோறும் கும்பகோணத்தினின்று வெளியாவது. இதன் ஆசிரியர், இலக்கண இலக்கியம் முதலான

பன்னூல்களையும் நல்லாசிரியர்பால் முறையே கற்றுத்தேறிப் புலமை நிரம்பியவரும், மருங்காபுரி சமஸ்தான வித்வானு மாகிய திருவாளர், ஆ. சத்திவேற் பிள்ளை அவர்கள். பாரத மக்களின் முன்னேற்றத்திற்கு உழைக்கும் பத்திரிகைகளில் இதுவும் முதன்மை பெற்றதே. இதில்வெளிவரும், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் உரைகள் முதலானவைகள் தமிழ் நாட்டிற் குப் பேருபகாரத்தை அளிக்கவல்லது. இதன் வருஷ சந்தா ரூபாய் ஐந்து.

*
* *

## "தமிழ்ப் பொழில்."

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிடும் "தமிழ்ப் பொழில்" திங்கள் வெளியீடு துணர் 5, மலர் 5, 6 நமது பார்வைக்கு வரப்பெற்றோம். தமிழ்ப் பொழில் என்ற பெயருக்கேற்ப, தமிழ் மக்களின் மனக்கூட்டத்தைக் குளிரச் செய்யுமென்பதற் கையமின்றாம். இதனது சொற்சுவையும், பொருட்சுவையும் உன்னுந்தோறும், உன்னுந்தோறும் ஓவா வுவப்பை யுண்டாக்குகின்றது தமிழ்க்கடலை யுண்டேப்பமிட் டோர்களே இதற் காசிரியருங் கட்டுரை தருவாருமா யுளார். தமிழின் தொன்மையும், அதன் பெருமையும், அவசியமும், அரியபெரிய நூல்களின் விளங்காப் பொருள்களும், அநேக ஐய நிவர்த்திகளும், இப்பொழில் எளிதி னுணர்த்துகின்றது. தனித் தமிழ் நடைகொண் டிலகுவது. சுருங்கக் கூறின் இத் தமிழ்ப் பொழிலின் பேருதவியால் நமது தமிழ் விரைவில் வளரப்பெற்று, தமிழ்நாட்டினுற்ற அன்னிய மாசழியப்பட்டு, தமிழ் மணமே மிகு மென்ப துண்மையாம். ஆதலான், ஒவ்வொரு தமிழர் கையினும் இப்பொழிலைப் பெற லவசியமாம். இதன் ஆண்டுச் சந்தா மாணவர்கட்கு ரூபா 2. ஏனையர்க்கு ரூபா மூன்று.

---

## பணி.

(S. கந்தசாமி அய்யர் தேத்தாகுடி.)

(முன் தொடர்ச்சி.)

---

நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. (குறள்)

பெரிய இவ்வுலகத்தே நிலைபெற்ற பெருமை ஒன்றே. அது நேற்றிருந்த ஒருவன் இன்றில்லை என்பதாம், என்று, உலகத்தார் நன்னெறிப்பட்டு ஒழுகுமாறு இயற்றிய நீதிநூலில், உலகப்பெருமை இம்மட்டுந்தானெனை மிகக் குறுகலாய் நாயனார் நவின்றனர். இன்னும் இவ்வாக்கை நிலையாமையைப்பற்றிக் கூறிய பெரியார்வாக்குப் பல. இதனுண்மையும் இளைஞருமறிந்த அனுபவமே ஆதலான் இதற்கென உதாரணம்பல கூறிக்கொண்டு நில்லாது மேற் செலுவாம்.

நிலைபெறுத மானுட உடற்றுங்கியோர், இவ்வுலகத்தே நடந்துகொள்ளவேண்டிய சட்டதிட்டங்கள் பல. அவைகளில் முக்கியமானது "அறம்." அவ்வற நெறி வழாது நடந்து கொள்ளல் வேண்டும். அவ்வறம், இல்லறம் துறவறம் என இருவகைப்படும். இல்லறமாவது, இல்வாழ்க்கைக்குச் சொல்லப் படுகிற நூல்வழியிலே நின்று, அதற்குத் துணையாகிய கற்புடைய மனைவியோடு கூடிப் புரியப்படுவதாம். துறவறம் என்பது, புறமாகிய செல்வத்திலும், அகமாகிய உடம்பிலும் உண்டாகிய பற்றை அவைகளின் நிலையாமையைக் கருதி விடுத்து, ஐம்பொறிகளுக்குரிய புலன்களைக் கெடுத்து, நான், எனது என்னும் மயக்கறுத்துக்கொண்டு பேரின்ப முத்தி அடைவதாம்.

இவ்வறங்கட்கு, பிரமசாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி என நான்கு ஆச்சிரம முண்டு. அவ்வவ்வாச்சிரமங்கட்குக் கூறிய விதிப்படி வழுவாது நடந்துகொள்ளல் வேண்டும். நல்லன புரிந்தால் இனிப்பிறவாதிருக்கும் மருந்தைத்தேடியருந்தத்தக்க நன்னெறியில் புகுவிக்கும். தீயன புரியின், எடுத்த சென்மநலம் பாழாகி மீண்டும் எழுவகை யோனிகளின் வாய்ப்பட்டு இழிவான பிறவிக ளெய்தத் துன்புற நேரும். அவைகளைக் கடந்து மீண்டுங் கரைகாணுத லென்றால் அம்மம்ம! எளியதோ?

(தொடரும்)

## நாளது வரையில், கலாநிதிக்குச் சாஸ்வத சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து உதவியவர்கள்.

1. ஸ்ரீமான் S. A. நாராயண அய்யங்கார் அவர்கள், சம்போடை.
2. „ G. ராமாநுஜ முதலியார் அவர்கள், வடபாதிமங்கலம்.
3. „ பொ. கந்தசாமி சாமியார் அவர்கள், வேதாரணியம் பசுமடம்.
4. „ N. K. கோபாலையர் அவர்கள், தியாகராஜசுவாமி கோவில் கட்டளை வில்லேஜ் இன்ஸ்பெக்டர், திருவாரூர்.
5. „ ச. ல. கோபாலசாமி பிள்ளை அவர்கள், அகத்தியான்பள்ளி.
6. „ S. சொக்கப்பா முதலியார் அவர்கள், ஆஸ்பத்திரி தெரு, திருத்துரைப்பூண்டி.
7. „ V. K. வைரப்ப தேவர் அவர்கள், செண்பகராயன்நல்லூர், கரியாபட்டணம் P. O.
8. „ ஓ. அ. க. ஓமக்குட்டி பிள்ளை அவர்கள், கோடியக்கரை.
9. „ ஓ. அ. த. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள், „
10. „ மா. நா. சி. பசுபதிநாதம் பிள்ளை அவர்கள், „
11. „ M. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்கள், வேதாரணியம்.
12. „ ச. குமாரசுவாமி பண்டாரசந்நிதி அவர்கள், மானேஜிங் டிரஸ்டி, வேதாரணியம்.
13. „ S. இராமாமிருதய்யர் அவர்கள், பாலையூர், (Via) முத்துப்பேட்டை.
14. „ K. சீநிவாசராகவய்யங்காரவர்கள், கரியாபட்டணம்.
15. „ K. V. தக்ஷிணாமூர்த்தி அய்யர் அவர்கள், டிப்டி தாசில்தார், திருவிடைமருதூர்.
16. „ சிதம்பரநாத முதலியார் அவர்கள், சீர்காழி.
17. „ S. சுப்பராய முதலியார் அவர்கள், „
18. „ S. M. R. M. சோலையப்ப செட்டியார் அவர்கள், பள்ளத்தூர்.

---

(தொடரும்).

# மதனாபிஷேகம்
அல்லது
# மாயையின்கேடு.

## அத்தியாயம்—1.

## பெண்டுகளின் பிடிவாதம்.

(முன்தொடர்ச்சி.)

ஞானா:—சின்னாட்கழித்துச் சேர்வனலது, இந்நாளிணங்கேன்.

சுந்த:—தேமற்றனத்தாய்! செப்புவகேள். நின்போன்ற மாதர்கள், இத்தகைய பிடிவாத வசனம் இயம்பியதில்லை. நினது மொழியே புதுமொழியாய்க் காண்கின்றது. வீரபத்தினியாய கண்ணகியின் குணத்தைக் கவனஞ்செய். அவள் யாது புரிந்தாள்? நின்போன்று பிடிவாதமொழிகளைப் பேசினளா? நாயகன், பொருளில்லாமையால் நாணடைந்தேனென்றலும் புன்னகையோடு சிலம்பு இரண்டுளது. அவற்றைக் கொண்மினென்றாள். இத்தகைய மாட்சிமையுற்ற பெருங்குணம் பெறுவதன்றோ பெருமை. தாசியைச் சார்ந்தநீர் தனங்கேட்ப தெங்ஙனமெனத் தடுத்துரை பகர்ந்தனளா? நீ சிலப்பதிகாரங் காணாதவளல்லவே. அம்மாதுசிரோன்மணியின் பெருங்குணத்திற்சிறிது நின்பாலின்றே! பிடிவாதத்தையே பெரிதுங்கைக்கொண்டு பேசுகின்ற தழகல்ல. சில பெண்டுகட்குப் பிடிவாதமுண்டு. அஃதான் அக்குடும்பஞ் சீர்கேடடைந்து தலைகீழாகியது. இஃதனைத்து முணர்ந்து குற்றங்களைந்து குணத்தைக் கைக்கொள். வறிதே என் மனதைப் புண்படுத்தி யலையச்செய்யாதே. மகிழ்ந்து கனிந்து அணைந்து மகிழ்வுறுத்து.

ஞானா:—பேஷ்! நன்றியம்பினீர்கள். பதில் விளம்பவும் ஏற்ற நூலாதாரமுங் காண்பித்தீர்கள். எந்த உத்தமிகளும்

தன் கணவன் தாசிபாற் சிக்குண்டதறிந்து தளரா
திரார்? அணங்கினுக் கணங்கியற்று மழகினைப்பெற்ற
வீரபத்தினியாய கண்ணகி, தன்மணாளனின் றீச்
செயற்கண்டு மனம்புழுங்குறா திருந்தனளோ? இன்
றின்று கோவலன் போந்து பொருளற்றதால் நாணுற்
றேனென்று எது கருதி யியம்பினான்? அச்செறி
தொடியாள் எது கருதி விடையிறுத்தாள்? ஆழ்ந்
தூகியுங்கள். கோவலன், தாசியைத்தணந்து பொரு
ளீட்டத்தை நினைந்து தன்செயற்குத் தளர்ந்து மனை
வியின் பெருமையுணர்ந்து பைந்தொடியின் மதிவத
னம் பார்த்து அவளது பொன்போன்ற மேனியின்
வாட்டமும் வருத்தமுங் கண்டு எல்லாப்பொருளையும்
பொய்யை மெய்யாகப் பொருந்துவித்தொழுகும்
பொய்த்தியோடுங்கூடி ஆடிய 'வொழுக்கத்தினானே,
நக்குலத்திலுள்ளார் தேடித்தந்த மிக்க நிதிக்குன்ற
மெலாம் அவ்வேசை பொருட்டால் தொலைந்ததினான்
"இலம்பாடு நாணுத் தருமெனக்கென்ன" அப்பொற்
றொடியாளும் யாது கருதினாள்? தன் நாயகனின் தற்
கால நிகழ்வை யுணர மனம் போந்ததா? இன்றேற
தன்றலைவன் சதா தாசியைச்சார்ந்து இன்பம் நுகர்
வதையே யெண்ணி யெண்ணி, எக்குற்றிருந்ததான்
அக்காலத்தும், தன் புருடன் றன்னைப்போற்றி, இல
ம்பாடு நாணுத் தருமென்றதனை, மாதவிக்குக் கொடு
க்கும் பொருட்குறைபாட்டால் தளர்ந்து கூறினாகக்
கருதி, புலந்து கூறினாற் கற்பின் றன்மையன்றாமென
வுன்னி, ஒளிபொருந்திய முகத்தே நலம் பொருந்திய
புன்சிரிப்பை விளைத்து, முன்பிருந்த கலனெல்லாம்
தொலைந்ததான், இவையொழிய வேறில்லையென
அறிந்துகொள்ளத்தக்க வசனமாய், இன்னுஞ் "சில
ம்புள கொண்மென" என்றாள். இவ்விடையை நன்
றாலோசியுங்கள். அம்மாது நல்லாளின் எண்ணமெல்
லா மெங்குற்றிருந்ததென விளக்கமுறும். அக்கோவ
லனும் தன் பத்தினியின் பதிலறிந்து, தன் குற்றங்
கருதி நைவுற்று, கணிகை களிக்க கைப்பொரு

ளிலாது கலங்குகின்றேனெனக் கருதியதை மாற்றி, உண்மையை யுணர்விப்போமெனவுன்னி, திருப்பவும் அவ்வாரிழையாள் திருமுகம்நோக்கி, "சேயிழை கேளிச் சிலம்பு முதலாகச் சென்றகலனோ டுலந்த பொரு ளீட்டுதலுற்றேன்" எனச் செப்பினன். இது வன்றி அம் மாபத்தினியாகிய கண்ணகி தன் கொழு நனை வேசியில்விற்கேகென்றனளா? அல்லது தன் மன்னன் செயற்கு உவப்புற் றுள்ளம்பூரித்தனளா? இவ்விருசெயலுமின்றே. தன் கணவனின் கடுஞ்செய் கையறிந்து, கண்ணீரால் மண்ணீரம்படக்கலுழ்ந்து, வாடிவதங்கினள். இஃதலாது, வேறு தாங்களறைவது மானச் சிலப்பதிகாரத்து எதுங்காணேன். அக்கோவ லன்போன்று தன்னறிவுதோன்றி என்பால் அன்பு கொள்ளும் வரையிலும் அருகிலணையேன், ஆலிங் கனஞ்செயேன். இஃதலது நிகழ்காலம் பிறிதிலது.

சுந்த:—செறிகுழலாய்! சீற்றங் கொளற்க. பெரிதுங் கற்ற வெனக்கும் நின்போன்று மறுமாற்றம் நாலுக்கிணங்க நுவலவறியேன். இத்தகைய கல்விப்பெருக்குற்ற நினக்கு, இனியியம்புதற் கேதுமில்லேன். தாசியை இனி எண்ணேனென்பது சாதமொழி. இஃதையே மீண்டுஞ்சாற்றுவேன். கற்றதற்கேற்ப கனந்தங்கிய குணத்தையுங் கைக்கொள். "கங்கையும் மூன்று பிழை பொறுக்கு" மென்றதைக் கருத்திலிருத்து. நினது கல்விப்பெருக்கை இன்றே யறிந்தேன். இனி நின்னையன்றித் தேவரம்பையரைக் கண்ணுற்றாலுங் காதல் கொள்ளேன். கவலை தவிர்தி. கடுமொழி கழறாதே. கற்புடைய நினது பெருந்தன்மைக்கு மிகுதியும் மெச்சினேன். இன்பவாரியே! இன்னும் வாட்டமேன்? இருபுயம் நெருங்கப்புல்லுவாய். கனங்குழாய்! கழறியது செவிப்புகவிலையோ? இன்னுந் தயவுசெய்ய எண்ணமுண்டாகவிலையோ?.

ஞான:— பேதைமையை அணிகலமாயுடைய மங்கையரை ஏமாற்றுவது எளிதென நினைத்தே உரைபகர்கின்றீர்கள். தமிழெனும் வாரிதியைத் துளியுஞ் சிந்தாது பானஞ்செய்த தங்கட்கு மனைவியாக வாய்த்த என்னிடம், ஏமாற்ற மொழிகள் ஏறாது. என்னுள்ளத்தினுற்ற கோபந்தணியுமட்டும், ஏது செயினு மிணங்கேன். இது உண்மை. ஏனோ வீணே வருத்துகிறீர்கள்.

ஆந்த:— சங்குக்கழுத்தாய்! சாற்றுவ கேட்டி. பங்கமற்ற என்னுரையனைத்தும் பகரக்கேட்டினை. அனைத்தும் அறமொழியலவென அறைந்தனை. நின்னை மறந்து இன்னும் பொதுமகளில்லம் புகுவேனென்றே புகல்கின்றனை. எனது இரக்கமொழிகளனைத்தும் ஏற்காதொழித்தனை. தூங்குமஞ்சம் விடுத்துத் தூரத்தே சென்றனை. இன்பமொழிகளை விடுத்துத் துன்பமொழிகளை புகன்றனை. எட்டுணையும் என்மாற்றத்திற்கு மதிப்பளித்தாயில்லை. நீ இவ்வாறு இயம்புதல் கண்டு, என்மனம் துன்பவாரிதியிற்றோய்ந்தது. வாத நோயுற்றார் மருந்துண்டு குணமடைவதுண்டு. நின் பிடிவாதத்திற்கு ஏதும் மருந்தளிக்கவியலாது மயங்குகின்றேன். இத்தனையியம்பியு மிணங்காததான் பித்தன் போன்றாயினேன். இனி, நின்னையும் நின்னகத்திற்கின்னல் விளைவித்த அவ்விலைமகளையும் விடுத்து எங்கேனுஞ் செல்லவெண்ணுற்றேன். இனி, பித்தன் செயலேவென் செயலாம். நாளைப்பகலில் என்னைக்காணாது, வாளாவிருந்து வாட்டமுறுவாய். இஃதுண்மை. இனியேனும் வீணே வாது புரியாது வந்தணை.

ஞான:— எவ்வாற்றானு மென்னை ஏமாற்ற எத்தனிக்கின்றீர்கள் போலும். அஃதால், மஞ்சமணுகேன். வாய்மொழி வழங்கேன். தணந்தார்போன்று தனி யுறங்குவேன். உளக்கொதிப்பாறுமட்டும் உளம் மகிழேன். உண்மை உண்மை. (தொடரும்.)

முதல் அத்தியாயம் முற்றிற்று.

நித்திரை யோகத் துற்ற நெடியமா றன்னை யானு
மித்திற மாய்த்து தித்து மெழுந்திலன் பள்ளி யன்றே
னெத்திற மியற்ற லாகு மின்பநித் திரையாஞ் சத்தி
கத்திட வதற்குள் ளாகி நயனமூ டிடவுற் றுறல். (அ

தானவ ரிவர்க ளென்னைத் தருக்கொடு கொல்ல வெண்ண
மானவ ராகக் கண்கொட் டாதுவந்தனர்நெ ருங்கி
யானவர் துன்பத் துற்றேன் யாதுசெய் திடவல் லேன்மற்
றேனயத் தைக்கு ளானே னெங்கு சென்றிடவல் லேனல். (கூ)

என்றுதான் மனத்து ளெண்ணி யிறைகவ லுற்றுப் பின்னர்
நன்றுறத் தெளிந்து தெய்வ நல்லரு ளாற்றுன் பற்றிங்
கொன்றுமிவ் வரிய சைவற் றுறும்பொருட் போலி யற்றி
நின்றதெச் சத்தியோவந் நிமலையென் றனையுங் காப்பள். (க0)

வேறு.

ஆவியற் றிடுவனே னைம்பூத குணவிடய மறியாத போனித் திரா
தேவிவச முறுமரி திருக்கண் டிறக்கொணுச் செயல்கொட டறியாதுற்றனன்
மேவியிவ னைத்துதி விரும்பியது மெவ்வளவு மேலாம் பாத்துவ மெனக்
கூவியது ளேதுங் கொளச் செவிகள் கேட்குங்குணம்படைத்துளனுவனே.
(கக)

ஆதலிவ னித்திரா சத்தியின் வயத்தனே யன்றிவன் வயத்த ளவளன்
றேதமி லெவன்பிறர் வயத்தனே வவனவா தேவலனெ னத்திகழுவ
னீதமுறை யீதினு னித்திரா சத்திவய நிற்குமிந் நெடுமா றனக்
சோதவந் நித்திரா தேவியே யேவல்கொள் ளுங்கடவு ளாவண் மன்னே.
(கஉ)

அத்தேவி மாவிலக் குமிதேவி யாவளென் றறையலா மெனிலவளுமா
லொத்தே விழித்திடா துற்றனள தாலிங்க ணேதுதிரு மகளுக்கு மற்
றேத்தேவ ருக்குமிறையெனுமாலையே துயிலிலிறைவியவள்வயமேற்றதான்
முத்தேவி முத்தேவர் முழுதுமத் தேவிவய மொய்த்தவென் பதிலையமென்.
·(கங)

மாயனே யத்தேவி மாயைக்கு ளாகித்தன் வயமிழந் தானென்னின்மற்
றுயகட வுளர்செய்கை யறைவதென் னுதலா லந்நித்தி ராதேவி யை
நேயமொடு துதிசெய்யி னெடுமால்விழிக்கவந் நிமலைசெய் குவளென்றயன்
போயருந் துதிபல புரிந்தனன் பின்னிவண் புகல்கின்ற வாறுமன்னே.
(கச)

வேறு.

ஆரண மனைத்திநுக்கு மறிந்தன னம்மை நீயே
காரண மூலகுக் கென்னக் கரியதற் குயிர்கட் கெல்லாம்
பூரண வறிவ ளிக்கும் புகழ்புரு டோத்த மன்சீர்
நாரண னுன்வ யத்தி னல்லநித் திரையி லுற்றுன். (கரு)

மன்னுயி ரனைத்து மேவி வாழுமெம் மன்னாய் மாலே
தன்னது வயமி ழந்தான் றானெனிற் சமர்த்த னாய்மற்
றன்னது மகிம யுக்கு மோர்விளை யாட்டின் றன்மை
யின்னதென் றறிய வல்ல னெவனுள னுலகத் துள்ளே. (கசு)

சந்தியை யென்னும் பேராற் றவமுனிக் கணங்க ளுன்னை
வந்தனை முக்கா லத்தும் வழாதருங் குணரூ பத்தைச்
சிந்தனை செய்கின் றாரத் தியானரூ பத்தா யாக
முந்துமை யதிற்சே ருன்னை மூண்டறி பவர்க ளில்லை. (கஎ)

சாங்கியர் புருட ரென்றார் தகும்பிர கிருதி யென்று
மோங்குசை தன்ய பாவ ரகிதையென் றுஞ்சொல் வார்க
ளீங்கிதன் றாக்குங் கர்த்தை யென்றுஞ்சொல் வார்க ணீமற்
றாங்கவ ருரைபோ லாக்கு மரிய மாண் புடைய டாளு. (கஅ)

உண்மையஃ தாயினிந்த வுந்திபூத் தோனை யெனிங்
கெண்மய லுறத்தான் ஞான மிழந்துறச் செய்தா யீதோ
திண்மையுன் றனக்கு மற்றுந் திகழுறுஞ் சகுணை யாகப்
பண்மய லுறவே கூத்தைப் பலவித மாகச் செய்வாய். (ககூ)

உன்னதோர் தொழிலை யாரு முணர்பவ ரில்லை யுன்னை
முன்னிமுக் காலத்தேயு முனிகள்சந் தியைகா யத்ரி
யென்னுஞ்சா வித்ரி யென்னு மிலகுநா மநணங் கற்பித்
தின்னய மாத்தியான மியற்றுகின் றார்கண் மன்றே (உ௦)

உயிர்களுக் கறிவை யூட்டுமுன்னையே புத்தியென்றுஞ்
செயிரறு தேவர்க் கின்பஞ் சேர்ப்பதிற் றிருவென் றுஞ்சொ
லுய லெவர்க் குஞ்சி ரத்தை யருமதி காந்தி முன்னா
நயகுண மீவ தாலந் நற்குண ரூபி யென்றும். (உக)

சொல்லவுற் றனையே துக்க டோன்றிவை களையா யுங்கால்
வல்லையுன் னினுமேற் றெய்வ மற்றுமென் றன்னாற் சொல்ல
வில்லையா தலினாற் றாய்நீ யெவ்வுல கினுக்கு மென்ப
தல்லலுற் றரிவிழிக்கா ததில்விளங் குறுநன் கின்னே. (உ° )

இதுவரை யரியைத்தெய்வ மென்றெணி யிருந்தே னிப்போ
ததுவிளங் கியநன் றாயிங் கறிவுகெட் டுறங்கு மாந்த
ரெதுமுணா ராத்தன் மைபோ லென்றுய ரறியா தேதும்
பொதுவுணர்ச் சியுமி லாமற் பொருந்தரி தாயெங் காவன். (உ௩)

வேதவித்துக்க ளானும் விளம்பிடத் தறிய வொண்ணு
நீதனி வேத்தாலு நிகழுதன் பொருள்வி சேட
மோதநிற் பவைகளாலு முன்புக ழறிய மாட்டா
வேதத்ற் கென்னே வென்னிலிம்மறை வந்த துன்னால். (௨௪)

உலகமார் கிருத்தி யங்க ளுன்னதீ துண்மை யுன்ற
னலகில்சீர் சரித மெல்லா மறிபவ ரெவரு மில்லை
யிலகுறு மரிய ராதி யிமையவ ரோடென் னுலும்
வலமிலை யென்றுன் மற்று மாதவ ரறிவ தெங்ஙன். (௨௫)

வேதவித் துக்கள் வேள்வி மேவுமா குதிகள் செய்யும்
போதருஞ் சுவகா வென்னப் புகலுன தரிய நாம
மோதலற் றிடுவ ரேலங் கும்பர்தம் மவியைக் கொள்ளா
ராதல்விண் ணேர்க்கா கார மளிப்பவ ணீயா கின்றாய். (௨௬)

பண்டைநா ளசுரர் தம்மாற் படருமச் சத்தி யானு
மண்டரு முன்னுற் காக்க லாயின மன்றே வம்மா
வெண்டரு மதுபோலின்று யிரட்சிக்க வேண்டு மாசை
கொண்டதா னவர்க ளச்சங் கொண்டுனைச் சரண டைந்தேன். (௨௭)

உன்னையல் லாது வேறு யுறும்பல தேவர் தம்மை
மன்னுமோர் மந்த புத்தி வகித்தவர் துதிப்ப ரோர்கா
லென்னைநீ மாலை முன்ன ரெண்ணியே துதித்தா யென்ன
வின்னணம் வினவி லம்மா விப்பொழு தென்றுன் போரான். (௨௮)

அவனுண ராதற்கேதுன் னநுசந்தி யால்வ சீகங்
கவவுறு முடலைக் கொண்டான் காணவன் றுயிலை நீக்கன்
றிவணசு ரரைக்கொல் வாய்மற் றியான்சொல வல்லே னல்லன்
பவமறச் சொனதி லெண்ணப் படிநல முறச்செய் வாய்நீ. (௨௯)

உன்னது மகிமைதன்னை யுருத்திரன் மான்முன் காணு
தின்னமுந் துதிசெய் கின்றா ரெனிலுனை யான்செய் வாயீ
தென்னவெங் ஙனஞ்சொல் வேனுன் னிரும்புக ழளவிற் கெட்டா
தன்னவை யுணர்வன் யானு மதற்குமால் கரியிங் காவன். (௩0)

மற்றதெவ் விதமெ னின்மான் மருமத்தார் திருவு மம்மா
லுற்றநித் திரையை நீக்க வுறுஞ்செய லற்ற தன்றிப்
பெற்றநித் திரையிற் றானும் பேர்ந்திடா துறங்கு கின்றாள்
சொற்றரு மிடத்தெ லாமுன் றுகளறு சத்தி யேயாம். (௩௧)

உலகினிற் பலதெய்வத் தென் னுறத்துதி செய்த னீக்கி
யிலகுமுன் பாதப்போதி லின்புறும் பத்தி கொள்ளு
மலகில்சீ ருடைய ராரோ வவர்தன வந்த ராவார்
சொலவவர் தாமுன் பாதத் துகளிலன் புறுவர் மாதோ. (௩௨)

உன்னது சொருப மாக வுறும்புத்தி காந்தி கீர்த்தி
நன்னய விருத்திமுன்னா நவிலுறுங் குணங்க ளெல்லாந்
தன்னது குணங்க ளாகத் தரித்தமா லவைவிட் டின்ப
மன்னநித் திரைகைக் கொண்டு மற்றெவண் சென்றான் கொல்லோ. (௩௩)

மாயனு முறங்கு கின்றான் மற்றவன் றேவி தானு
நேயநித் திரையி லானா னிகழவர் குணங்க ளெல்லாம்
வீயவு மாயிற் றம்மா மேவுமுன் சத்தி யாக
வாயநித் திரையின் மாய னடக்கமுற் றனனீ துண்மை. (௩௪)

மகிமைக ளெல்லாமுன் றன் வயத்ததாற் சத்தி நீயே
யகிலமுற் றினுக்கு மாவா யன்றியு முலக மெல்லாஞ்
சுகியுன தருஞ்சி ருட்டித் தொழிலெண்மாத் திரமுண்டாக்கி
விகிதநா டகன்போ னின்று மிகவிளை யாடுகின்றாய். (௩௫)

ஆக்குங்கா லரியைத் தோற்றி யவன்செயற் குரிய தாகுங்
காக்குஞ்சத் தியையீந் தாயக் காரணத் தவனுங் காத்தா
னேக்குமித் தருண மன்னா னுவலுநித் திரைவ யத்திற்
றாக்கினை யம்மா வுன்னெண் டருமதை யியற்று கின்றாய். (௩௬)

பகவதி யெனையு நீதான் படைத்தனை படைத்த நீயே
யகநினை வெனக்கொ லெண்ண மாகநின் றனையென் றென்னெண்
புகவுளன் யான்கொள் வண்ணம் பொருந்தலை யெனினீ மௌன
மிகவுறு வதைவிட் டின்னே விளங்கவாய் திறந்த ருள்வாய். (௩௭)

சுத்தநிர்க் குணையே கால சொருபிக ளான விவ்வுன்
மத்தார மசுரர் தம்மை மாசறப் படைத்த தென்னை
யெத்தகை வலனென் றோரு மெண்ணங்கொ டன்றிவேறெ
னித்தரு ணத்துன் லீலை யின்னதென் றறிந்தேன் யானே. (௩௮)

உலகினைப் படைத்து நீயுன் னொருசுதந் தரையா யாட
லிலகுறச் செய்வாய் பின்ன ரவையுஞ்சங் கரிப்பாய் மற்றும்
பலவிதம் படைத்த ழிக்கும் பரிசொரு விளையாட் டாகக்
குலவுநீ யெனையுண் டாக்கிக் கொல்ல வெண் ணுதல்வி யப்போ (௩௯)

மற்றுமுன் னிட்டம் போற்செய் மரணத்தா லெனக்குத் தக்கஞ்
சற்றுமிங் கிலையா ஞலுன் றனக்கொரு பழிச்சொ லுன்ற
லற்றைநாட் படைத்த வேத னசுரராற் கொலகின் றனென்
றெற்றைக்கு முலகு ரைத்தற் கேதுவா மெனவெண் ணுற்றேன். (௩0)

ஆதலாற் றேவி யிங்கோ ரற்புத வுருவங் கொண்டிப்
போதசு ரரைமற் றென்னைப் பொன்றிடச் செய்வை யன்றிம்
மாதவன் றனையெ ழுப்ப மனங்கொளன் னவனெ ழுந்தாற்
றீதறச் செய்வன் யாவுஞ் செயகிறை வேறு முன்னால். (௩௧)

என்றயன் றுதிக்கத் தேவி யின்னரு ளான்மா லாக
நின்றுதா மதுவு ருப நித்திரைக் குரிய சத்தி
யன்றசு ரரையொ ழித்தற் காகநே ருற்றத் தேவி
யின்றிருப் புறநின் றுண்மா லெழிலுட லசையக் கண்டான். (௩௨)

ஏழாமத்தியாயம் முற்றிற்று.

(ஆக செய்யுள் ௨௫௩).

---

உ

ஸங்க் ஹ்ரீஞையை நம:

## எட்டாமத்தியாயம்.

## சக்தி ஸ்வரூப கதனம்.

---

மாதவச் சூதமுனி வான்முனஞ் சவுனகர் வழங்கிடுவர் மாமுனிவரீ, யோதலுற் றதில்வியப் புறுமைய மிகவெமக் குதைய மாகின்ற தெனெ னில், வேதமற் றுளநூல்கண் மேலோர்க ளாலுமயன் விண்டா னஞதி யெனவு, மேதமற் றிடுமவர்க் கெவனுமே லுளரொருவ ரிலையெனவு மோது மிவருள். (௧)

சிருட்டிக் கயன்காவல் செய்வதற். கரியுருத் திரனழித் தற்கெனவு மற்,றருட்டிறம தாகுமிவ ரகிலகா ரணகருத் தாக்களென வுஞ்செயல் பெறும். பொருட்டொருவர் மூன்றுப் பொருந்துகுண வேற்றுமைகள் புகநாம மேற்றுலகினை, மருட்டுசெயல் யாவுமே மருவிடச் செய்துவரும் வலரெனவு மற்றவ ருளே. (௨)

மாதவன் புருடோத்த மன்ஞதி தேவனெனு மாயன்மிக வலனெ வைக்கு, மோதவனி னுந்திற னுரைப்பதற் கிலையெனவு முறுதிபெறு மாலிவன்ற, னீதவழி யற்றிடவு நித்திரா சத்திவழி நின்றதெவன் ஞான மறியா, தேதவழி காரணமத டங்கியவை யாவெலா மிங்கியா மறிய வருள் வாய். (௩)

சத்தியான் முன்னமரி சயமதுற் றனனெனச் சாற்றுமஃ தெச்சத்
தியச், சத்தியுண் டானதெத் தகையவ்வி தச்சத்தி தனையுடையதெது
மற்று மச் சத்திதனை யுறுமதெத் தகையுறும் புகழ்மிகுஞ் சருவேச்னரி
நித்திரா. சத்தியா லெவ்விதந் தான்மய லடைந்துபர தந்திரனெனச் சொல
வுளான். (௪)

இதுவெமக் கோர்வியப் பேறுவதோ டையமுற வேதுவா கியுமுற்
றதா, லதுதவிர்த்திடவெமக் கருஞான வாளுருவி யையகளை வாயென்
னுங், கதுமெனச் சூதமுனி கண்டுமுனி காருமத கங்காணு மைய மிரியப்
பதுமமல ரலனருள்செய் பவருமுனி வாரும் விடை பகரமன மஞ்சுவ
ரெனில். (௫)

அறிவினிற் சிறியவென் னுவோச னைக்குளுற லரியதென் பதிலைய
மென், னெறியிதா லேமுனிவர் நீரறிய வென்னறிவு நிகழ்வதுரை செய்வ
னறிமின், னறியமா லினை யுலகி னுடுசிலர் தேவரு ணயந்தவ னியாவர்க்கு
மேற், செறியுல களிப்பவன் றிகழ்விராட் புருடனத் திருமா லிடத்தி
ருந்தே. (௬)

உலகமுண் டானதென் றோதுமறையாலவனு பாசனையு றத்திகழுவன்
சிலாரன் றனைமகா தேவனுமை பாகன்சந் திரசேக ரன்சங்கர
னலகில்புகழ் தருபெயர நேகங்க ளாலின்னு மருமறை கடுதி செய்வதா,
விலகுமவனைத்திரு வெழிற்கொளு முபாசனை யியற்று கின்றனர் விளங்க.
(௭)

பரிதிதனை யேசிலர்பரம்பொருளெனக்கொளும்பரிசினு லவனுபாசம்
புரிவர்முப் பொழுதும் புரந்தரன்மு னுதியர் புறஞ்சில ருபாச முறுவ
ருரியநற் கங்கைபல வுபநதிக ளோடுசே ருந்தகையெ னச் சிலவர்தா
மரியை யெத் தேவரொடு மாக்கிப்ப ணிந்திடுவ ரையவிவையன்றியுலகில்.
(௮)

காட்சியனு மானசத் தங்களெனு மூன்றளவை காணுமென் பார்சில
ரினுஞ், சூட்சியுவ மானமுந் தொடர நான் கென்பர்சிலர் சொல்லருத்தா
பத்தியோ, டாட்சிபெறு மைந்தென வறைந்திடுவர் சிலர்நூலறிந்தவர்க
ளேழென்ப ரிம், மாட்சிகொளு மளவைகண் மதிக்கரிய பொருளொன்று
மருவவுண் டென்பர் சிலரே. (௯)

இவ்விதத் தவ்வவ ரிசைப்பர்பல வாயதா லியம்பவர்த மளவை கொண்
டே, யவ்வவரு மெதுபரம தாம்பொருளெ னப்புத்தி யாற்றனறி வுடனுக
மத், தொவ்வுதற் கஞ்செய்து றுங்காற்பொ ருந்துமோ ருத்தியில் விசார
மாற்றி, யெவ்வமற வேயுறுதி யிதுவெனக் கொளவேண்டு மிங்குசொல்
விசார மெனெனில். (௧௦)

மாமறைமுனுரை செய்யும் வாக்கிய விசாரமே மருவவ்விசார மேற்ற
நேமவழி வரலுமந் நெறியூக மாருத்தி நிகழ்வதாலும் பின்னிது, சேம
முறி வர்க்குரைகள் செய்ததுமெய்யீதிவர் திறங்கொளுப சாரமென்றெண்
டாமதமி லாதசிந் தனையடிக் கடிசெய்த றகுதியச் சிந்தனை யினால். (கக)

ஐயமற் றுணரறிவினார்திருட் டாந்தவழி யாயுமெய் ஞானி யாகுந்,
துய்யபெரி யோரினாற் றுறையின்முறை யாயுமோர் துகளறத் தெளிய
வேண்டுஞ், செய்யவழி யிதுவெனத் திகழ்வேத நூன்முதற் செப்புமா
விருடிகாண் மற், றுய்யவரும் விடயமிதை யோத விரி வாமினி யுறுந்
தகைக யுரைப்ப னறிவீர். (கஉ)

அரியாதி தேவரை யநேகபெரி யோரன்றி யாரண புராண நூலும்
விரியுலக முஞ்சத்தி மேவினர்க ளென்னுமா விலகினர்க ளென்னு மாமற்
றரிய வொரு புருடனையு மொருபொருளை யுஞ்சத்தி யோதவில் லானிலா
தென், றிரிய வுறை செய்தலிலை யினியருஞ் சத்தியெவ் வியல்பெறுமிடந்
தொறு மெனில் (கங)

வேறு.

அயனிடத் தளிக்குஞ் சத்தி யரனிடத் தழிக்குஞ் சத்தி
வியனொளிப் பசல வன்பான் மோவொளிச் சத்தி சேடன்
மயல் கொள் கார்க் கோடகன் கூர் மன்னிவ ரிடந்த ரிக்குஞ்
செயற் சத்தி வன்னியிற்றீத் திகழ்சுடுஞ் சத்தியாயும். (கச)

வாயுவி னிடத்திற் றள்ளும் வலனுறுஞ் சத்தி மற்றன்
பீயுமோர் பரசி வத்தி னிடத்திற்குண் டலினி சத்தி
யாயுநந் நிலைபெற் றோங்கு மறையிவ ரிடத்திற் சத்தி
யேயுற விலையேற் சத்த ரிலரென வுரைப்பார் மன்னோ. (கரு)

அன்றியு முலகிற் காண்ச ராசர மனைவற் றுள்ளு
மொன்றிவாழ் சத்தி காண லுறுவதற் றிடிலோ வத்தை
நன்றிலாத் துச்ச மென்று நயச்சத்தி லாப்ப தார்த்த
மென்றுநிந் தனையி யற்றற் கேதுவாய் நிற்குமன்றோ. (கசு)

சாற்றொரு வனையொ ருத்தன் சயம்பெற வெண்ணிற் சத்தி
யாற்றல தன்றி யெங்க ளும்வெற்றி நடக்க வெண்ணு
மேற்றவன் சத்தி யில்லா தெவ்வித நடப்ப னுண்ணுந்
தோற்றமு ளானச் சத்தி துணையிலா துண்ணு வானோ. (கஎ)

ஆதலா லனைவற் றுள்ளு மாஞ்சத்தி யென்ப தொன்று
நீதமாய் நிறைந்த தென்று நினைவுற லாகு மந்தத்
தீதறு சத்தியாகுந் தேவியே பரம ரூப
மாதென வறிய வுற்றான் மாதவர் தேவர் யார்க்கும். (கஅ)

அவளுபா 'சனைகொண் மூர்த்தி யாயுறு வாளன் னுண்மா
தவனிடஞ் சத்து வங்காண் சத்தியா யயனி டத்தி
லிவறிரா சதமாய் ருத்ர னிடந்தமோ குணமாய் நின்று
நவமிகக் காவ லாக்க ளுசமு நடத்து கின்றாள். (௧௯)

இவ்வகைச் சத்தி யன்று ரிடமிலை யென்லின் மான்மு
னவ்வருந் தேவர் தத்த மருந்தொழி லியற்ற வோரா
ரெவ்வமின் முனிகாள் சத்தியே யுல கெவையு மாக்கி
யுவ்வகை காத்த ழிப்ப ளுறுந்தன திச்சை யாலே. (௨௦)

மாலய னுருத்தி ரன்சீர் வானவன் வருணன் றேயு
காலரும் பகல வன்முன் காண்பவர் யாவ ரேனுஞ்
சாலவர் தந்தொ ழிற்செய் தனிவல முற்று ரில்லை
கோலவச் சத்தி யோடு கூடியே செய்வ ராவர். (௨௧)

காணுமத் தேவி யாதல்கார ண காரியங்க
ளாணுறு மவையுட் காட்சி யளவையா லறியத்தக்கா
டாணுவா மவளைக் கற்றோர் சகுணைநிற் குணையென் றோத
மாணுறு வாளன் னளின் மகிமைக ளுரைக்கற் பாற்றோ. (௨௨)

ஆகவே சகுணை யாரு மப்பெருந் தேவி தன்னைப்
போககா மிகளு மற்றும் புகழ்கொணிர்க் குணையாய் நிற்கு
மேசநா யகியை மோக்கத் தினில்விருப் பவரு மிக்கத்
தாகமாய்த் தினமு மேத்தித் தமக்குளு பாசிக் கின்றார். (௨௩)

அறம்பொரு ளின்பம் வீடென் பதிற்கிறை வியுமன் றுண்மற்
றுறவிதிப் படியன் னுளை யுகந்துபூ சிப்போர் வேண்டுந்
திறமளித் திடுவண் மாயை செறிய வாழ் மூட ரன்றுண்
மறமுண ரார நிந்து மயக்குவர் பிறரைச் சில்லோர். (௨௪)

கற்றறி வல்லோர் தாமுங் கலியினோர் கொடுமை யாலே
மற்றறி விழந்து பற்பன் மதங்களை யுலக மெங்கு
முற்றறி வுறச்செய் கின்றா ரோது மிக் கலியில் வேத
மற்றதன் மங்கள் காண்ப தன்றிமற் றுகங்கள் காணு. (௨௫)

அயனரி யுருத்தி ரர்தா மகமுற வொன்றை வேண்டில்
வியனுறத் தியான மிக்க மேவின ராயச் சத்தி
வயமுறு வேள்வி தாம்பால் வகைபெறச் செய்வ ரன்னு
ளுயவரும் பிரம மென்றெண் ணுறத்துதிப் பார்கண் [illegible]

மாதவமுனிகா ளிங்கண் வளர்கலிக் கொடுமை [illegible]
தோதரும் வழி செல்லாம லுயர்பரம் பொருள [illegible] தவி
யாதர வதையே [illegible] மகத்தெனி யவளே [illegible]
யீதரு மறைநூல் யாவு மியம்புமவ் வழிநெ[illegible] வீரால் (௨௭)

# கலாநிதி சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| உள் நாட்டிற்கு வருஷ சந்தா | .... ரூ. | 2—0—0. |
| ,, சாஸ்வத சந்தா | .... ரூ. | 25—0—0. |
| வெளி நாட்டிற்கு வருஷ சந்தா | .... ரூ. | 3—0—0. |
| ,, சாஸ்வத சந்தா | .... ரூ. | 30—0—0. |
| தனிப்பிரதி 1-க்கு | .... ரூ. | 0—4—0. |

## சந்தாதாரர்கள் கவனிக்கவேண்டிய விஷயம்.

சந்தாத் தொகையை முன்னுடி செலுத்தியாவது அல்லது V. P. யில் பணங்கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும். எப்பொழுது சேர்ந்தாலும் அவ்வருடம் சித்திரை மாதம் முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு சித்திரை-மீ சஞ்சிகை முதல் அனுப்பப்படும்.

வியாசங்கள் எழுதுவோர் தெளிவாகவும், மததூஷணை, தூைத்தன விரோதம் முதலியவைகளில்லாமலும் எழுதவேண்டும். வியாசங்களைக் கூட்டவுங் குறைக்கவும் ஆசிரியருக்குப் பாத்தியமுண்டு. பிரசுரிக்கப்படாத வியாசங்கள் திருப்பி யனுப்பப்படமாட்டா. வேண்டுவோர் தபாற்செலவை யனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும். வியாசக்காரர் அபிப்பிராயங்கட்கு நாம் பொறுப்பாளியாகோம்.

கடிதம் எழுதுவோர் நம்பரைக்குறித்து தெளிவான நடையில் எழுதவேண்டும்.

மானேஜர்,
"கலாநிதி ஆபீஸ்,"
தேத்தாகுடி வடக்குச்சேத்தி P. O.,
*Via* வேதாரணியம்.

Printed by Chinthamani Ammal at the "Edward Press," Tiruvarur
and published by R. Vaithiyanatha Sarma, Thethakkudi Vadakkuchethi Post,
*Via Vedaranyam.*